


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உள்ளே

- எங்கள் கருத்து
- சிறுவர்வட்டம்
- வினாவிடைப்போட்டி
- சிறுவர்போட்டிகள்
- குறளும் பொருளும்
- கவிச்சோலை
- இலக்கியச் சாரல்
- சிறுகதை, கட்டுரை
- குறுக்கெழுத்துப்போட்டி
- சுகாதாரக்குறிப்புகள்
- செய்திக்கண்ணோட்டம்
- ஆதரவற்றோர் உதவிநிதி

முகவரி: V. Sivarajah
Am Windhovel 18A
47249 Duisburg-Germany

தொலைபேசி: 0203/8073898

தொலைநகல்: 0203/8073898

மின்னஞ்சல்: v.sivarajah@arcor.de

வங்கிவிபரம்:
Mann (Erde) Verein e.V. Duisburg
Stadtsparkasse Duisburg
Kontonummer: 225 000 421
Bankleitzahl: 350 500 00
IBAN-Nr.: DE41 3505 0000 0225 0004 21
SWIFT-BIC: DUISDE33XXX

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் கருத்து...

இலங்கை, பதுளை மாவட்டத்திலுள்ள கொஸ்லந்தை, ஹல்தும்முல்லை, மீரியபெத்த தேயிலைத்தோட்டத் தொழிலாளர்கள் வசித்து வந்த ஒரு முழக் கிராமமே (29.10.2014) அன்று மண்ணுக்குள் புதையுண்டு போயுள்ளது. கிட்டத்தட்ட இருநூறுக்கும் அதிகமான மக்களை,அவர்கள் நேசித்த மண்ணே உயிருடன் விழுங்கிக் கொண்டுள்ளது. 2004 இல் ஏற்பட்டசுனாமி அனர்த்தத்திற்குப்பிறகு,இலங்கையில் பல நூறு உயிர்களைக் காவுகொண்ட இயற்கை அனர்த்தம் இதுவாகும். அதே போலஇலங்கை, மலையக வரலாற்றில் இதுவரை இடம்பெற்றுள்ள மண் சரிவு அனர்த்தங்களில்,இப்போது நிகழ்ந்துள்ள இந்த அனர்த்தத்தை மிகவும் மோசமானஒன்றாகவும், பாரியஅழிவுகளை

ஏற்படுத்தியதாகவும்குறிப்பிட ப்படலாம். 29-10-2014 இலங்கை கொஸ்லந்தைப்பகுதியில் நிகழ்ந்த இயற்கை அனர்த்ததில் பலியானமலையகத் தமிழ் உறவுகளுக்கு எமது இரங்கல்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். இவ்வனர்த்ததினால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவர்களின் துயரத்திலும்உணர்வு பூர்வமாகப் பங்கேற்கிறோம்.

இலங்கையின் பொருளாதாரத்தைத் தாங்கியிருக்கும் மலையகத் தமிழ்ச் சமூகம் இரட்டைஅடக்கு முறைக்கு உள்ளாகி வரும் ஒரு சமூகமாகும். உழைக்கும் வர்க்கமாகக்கடுமையான பொருளாதாரச் சுரண்டலுக்கு உட்பட்டுள்ள இச் சமூகம், அதற்கு மேலதிகமாககொடூரமான இன ஒடுக்கு முறைக்கும் உள்ளாகி வருகிறது. சுதந்திர இலங்கையின்முதலாவது இன ஒடுக்கு முறை, பிரசாவுரிமைச் சட்டம் எனும் வடிவத்தில் இவர்கள்மீதே பிரயோகிக்கப் பட்டது. காலத்திற்குக் காலம் கட்டவிழ்த்து விடப்பட்ட இனக்கலவரங்களிலும் இவர்களின் உயிர்கள் கொத்துக் கொத்தாகப் பறிக்கப் பட்டன.

இன்று இலங்கை தேசத்திற்கு அந்நியசெலாவணியை அள்ளித்தந்த மக்கள்துடிதுடித்தும், அலறல் சத்தத்துடனும்ஆத்மா உடலைவிட்டு பிரிந்து போன நாள்அனைத்தும் அந்த சூரன் போர் போல் நூ ற்றுக்கணக்கானவர்களை பலி கொண்டு விட்டது.இது இயற்கையின் எதிர்பாராத கொடூரம் சம்பவம் என்று கூறுபவர்களும் உண்டு. ஆனால்உண்மை அதுவல்ல, இது செயற்கையின் கொடூரம். ஆம் இவர்களுக்கு இவ்வாறான நிலைவரும்என்று 2005 ஆம் ஆண்டே தேசிய கட்டிட ஆய்வு நிலையத்தின் ஊடாக எச்சரிக்கைவிடுக்கப்பட்டுள்ளது. எனினும் தோட்ட நிர்வாகம் இது குறித்து அக்கறை கொள்ளவில்லை என அரசாங்கம் தோட்டநிர்வாகம் மீது பழி சுமத்துகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடுங்குளிரிலும் பனியிலும் ஓயாத மழையிலும் அட்டை, பூரான் கடிக்கு மத்தியில் ஒரு நாளைக்கு 12 மணி நேரம் வரை உழைத்தார்கள். ஆனால், இவர்கள் வாழ்நிலையோ குரூரமானது. இலங்கை தேசத்திற்கு அந்நிய செலவாணியை அள்ளிக்கொடுக்கும் மக்கள் வாழ்வு மீண்டும் நிர்கதியாகியதே.

.ஒரு நாட்டில் வாழும் மக்களின் நலன் குறித்து அக்கறை கொள்ள வேண்டியது தோட்ட நிர்வாகமா? அல்லது அரசாங்கமா? அப்படி பெருந்தோட்ட மக்கள் மீது தோட்ட நிர்வாகம்தான் அக்கறை கொள்ள வேண்டும் என்றால் அப்போது அரசாங்கம் எதற்கு?அதேவேளை மலையகத் தமிழ் சமூகம் தொடர்பான இலங்கை அரசாங்கம்வழி செய்ய வேண்டிய கடமையை வலியுறுத்த விரும்புகிறோம். இன்னும் மலையக தமிழ் அரசியல் சக்திகள் சுயநலம் தவிர்த்து தம்மக்களது உண்மையானமேம்பாட்டிற்காக உழைக்க வேண்டிய அவசியத்தையும் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

அடக்குமுறைகளுக்குள் வாழ்ந்த மலையகத் தமிழ் சமூகம் இயற்கை அனர்த்தினாலும் பாதிக்கப்பட்டுள்ள இந்த வேளையில், அவர்களுக்கு ஆதரவுக்கரம்கொடுத்து இணைந்து செயற்படுமாறுஅனைத்துப் புலம்பெயர் தமிழ் மக்களையும் நாம் வினயமாக வேண்டிக் கொள்கிறோம்.ஒடுக்குமுறைக்கு உள்ளாகி வரும் ஒரு சமூகம் என்ற வகையில், மலையக மக்களின் துன்ப துயரங்களை நாங்கள் ஆத்மார்த்தமாகப் புரிந்து கொள்கிறோம். அடிப்படை வசதிகள் மறுக்கப்பட்டநிலையில் வாழ்ந்து வந்த மலையக மக்களின் வாழ்க்கையில், இவ்வியற்கை அனர்த்தம் ஒரு பேரவலத்தை விளைவித்துள்ளது. இப் பேரவலத்திலிருந்து அவர்களது உறுதியினால் மீண்டெழுவார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு. எனவே நாமும் எம்மாயிலன்ற உதவிகளை செய்திடுவோம்!..

"இன்றே செய்வோம்
அதை நன்றே செய்வோம்"

ஆசிரியர் –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்திசூடி விளக்கம்!...




## இளமையில் கல்..

புதுவெள்ளைத் துணியில் மசி பட்டால் பளீரென்று தெரியும். இலகுவில் போகவும் முடியாது. ஏன்!...நிர்மலமானது புதிய வெள்ளைத் துணி.. அதனால்தான் அதே போன்றதுதான் இளமைப் பருவத்து மனதும்.. அந்த வெள்ளை மனதில் எது படிந்தாலும் கப்பென்று பிடித்துக் கொள்ளும். ஆழமாக மறக்க முடியாதபடி பதிந்துவிடும். அதனால்தான் நம் முன்னோர் குழந்தைகளுக்குச் சிறுவயதிலேயே கல்வி கற்பிப்பதைக் கடமையாகக் கருதினார்கள். இளம்பருவத்தில் கற்கும் கல்வி மற்றும் எதுவானாலும் சரி, மனதில் ஆழமாக அழிக்க முடியாதபடி பதியும். சின்ன வயதில் கற்றுக்கொள்ளுவது எதுவானாலும் அது சாகும்வரை மனதில் தங்கி நிற்கும். ஆகவே நீங்கள் இளமைப் பருவத்திலேயே நல்ல நூல்களை ஆசிரியர்களிடம் கற்றுக்கொள்ள வேண்டும்....

## அறனை மறவேல்..

நல்லவைகளை நினை, நல்ல விஷயங்களைக்கூறு, நல்ல காரியங்களைச் செய், இப்படி நல்லவைகளை நினைத்து, பேசிச் செயல்ப்படுவதுதான் அறம். தருமம் ஆகும். ஆத்திசூடியின் முதல் நீதி என்ன அறம் செய்ய வரும்பு என்பதே. தருமம் செய்ய ஆசைப்படு என்றவர் இங்கு தருமம் செய்வதை மறந்துவிடாதே என்கிறார். தருமத்தை மறக்காமல் எப்போதும் நினைவில்கொண்டு வாழவேண்டும். நல்லதையே நினை, நல்லதையே பேசு, நல்லதையே செய் என்பதைத்தான் ஔவைப்பாட்டி அறனை மறவேல் என்கிறார்.. அறம் என்பது தருமம். நற்செய்கை, நல்லொழுக்கம், நல்லெண்ணம் இவையே தருமம் என்று எல்லா மதங்களும்சொல்லுகின்றன. ஆகவே மனிதனாகப் பிறந்தவன் தருமத்தை மறக்கக்கூடாது..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்திரம் வேண்டாம்

இயற்கை அழகை மயக்கவைக்கும் அந்தக்கிராமத்தில் அண்ணன் தம்பி என இருவர் இருந்தனர். அவர்களுக்கு ஒரு பூந்தோட்டம் இருந்தது. பூந்தோட்டத்தை அண்ணனுக்குப்பாதி தம்பிக்குப்பாதி எனச்சமமாகப் பிரித்துக் கொடுத்திருந்தார் இவர்களது அப்பா. இருவரும் தினமும் பூந்தோட்டத்தில் பூ பறிப்பார்கள். சாயங்காலம் பூக்களைப்பறித்துவிட்டு அடுத்தநாள் காலையில் சந்தையில்கொண்டுபோய் விற்பது வழக்கமாகும். ஒருநாள் மாலை அவர்கள் இருவரும் தாங்கள் பறித்த பூக்களை தனித்தனிக்கூடையில் வைத்திருந்தார்கள். சமவாகக் பூக்கள் அரைக் கூடைகளில் இருந்தன. தம்பிக்காரன் தான்பறித்த பூக்கள் இருந்த கூடையில் சிறிது தண்ணீர் தெளித்துவிட்டுத் தூக்கிப்போனான். ஆனால் அண்ணனோ தனதுகூடையிலுள்ள பூக்களுக்குத் தண்ணீர் தெளிக்கவில்லை. மறுநாள் காலையில் எழுந்து சந்தைக்குப்போகப் புறப்பட்டபோது தம்பியின் பூக்கூடையில் பூக்கள் நிரம்பி இருந்ததை அண்ணன் கவனித்தான். ஆனால் தனது பூக்கூடையில் அரைக்கூடைப் பூக்களே இருந்தன. இதனால் தம்பிமீது சந்தேகம் கொண்ட அண்ணன் "நீ என்னுடைய பூக்கூடையிலிருந்து பூக்களைத் திருடி உன்கூடையில் வைத்துக்கொண்டாய் அதனால் உன்கூடையில் பூக்கள் நிறையவே இருக்கின்றன" என ஆத்திரப்பட்டான். ஆத்திரப்பட்டுத் தன் கையிலிருந்த அரிவாளால் வெட்டினான்.

பலமாக வெட்டுவேண்டிய தம்பியோ துடிதுடித்து விழுந்தான். "அண்ணா நான் உன்னுடைய பூக்களைத் திருடவில்லை நான் இரவுநேரத்தில் பூக்கூடைக்குத் தண்ணீர் தெளித்து வைத்ததால் கூடையிலுள்ள மொட்டுக்கள் எல்லாம் நன்கு மலர்ந்துவிடும். அதனால்தான் என்கூடையில் பூக்கள் நிறைந்தன என்று சொன்னான். அண்ணனோ மறுநாள் தம்பி செய்ததுபோல் செய்தபொழுது அவனது கூடையும் பூக்களால் நிறைந்து வழிந்தது. இதன்பிறகுதான் தன் தவறை உணர்ந்து ஐயோ நான் அவசரப்பட்டு என் தம்பியை வெட்டிவிட்டேனே என்று கவலைகொண்டு தம்பியிடம் ஓடோடிச்சென்று காலில் விழுந்து மன்னிப்புக்கேட்டான். அவசர புத்தியால் ஏற்பட்ட வேதனைக்கு வருந்தினான். இக்கதைமூலம் ஆத்திரம் கண்ணை மறைத்துவிடும்.."கோபத்தால் அறிவை இழக்காமல் அகிலத்தை ஆண்டிடுவோம்"

செல்வி லி.திர்ஷா
றீத் மிஷன் – கிளிநொச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனமாற்றம்!..

அந்த ஏழை மாணவனுக்குச் சரியாக ஞாபகம் இல்லை.. எங்கே?... யார் சொன்னதுஎன்பதும் தெரியாது. அவன் நெஞ்சத்து உணர்வைத் தொட்டது.. அந்த ஒரு வசனம் அது. அவனைச்சிந்திக்க வைத்தது. அவன் எதிர்காலமே இருண்டு அஸ்தமான நிலையில் அவனே... அவனை வெறுத்து வேதனையால் துடித்த வேளையில் மிக மெல்லிய ஒளிக்கீற்றாக அவன் மனதைத் தெறிக்கவைத்த அந்த வசனம் "எண்ணம்தான் வாழ்க்கை" என்பதுதான். ஆம் அவன் பலவகையிலும் பாதிக்கப்பட்டபொழுது அவனுக்க இனிய யாருமே இல்லை என்றான் பொழுது கிடைத்ததெல்லாம் துாரதிஷ்டமாகக் காணப்பட்டபொழுது அவனுக்குள் ஊற்றெடுத்த ஒரு ஞான ஒளியாக இந்த வசனம் அவனுக்கு மன அமைதியைத் தெளியவைத்தது என்றால் மிகையில்லை.
அந்த ஏழை மாணவன் இந்த வசனம் பற்றி சிந்திக்கத் தொடங்கிய நாளிலிருந்து வாழ்வில் மாறுதல் ஏற்பட்டது. சிரமங்களுக்குப்பின் எதிர்பார்ப்புக்களும் கைகூடியது. எதிர்பாராத மண் சஞ்சிகை உதவியும் கிடைத்தது. அப்போது எதிலும் நம்பிக்கை ஏற்பட்டது.

செல்வன்.ராஜாமாணிக்கவாசகர்.
திருஞானசம்பந்தர் குருகுலம்
களுதாவளை.

## உப்பு!....

இரத்த அழுத்தம் உள்ளவர்கள் உணவில் "உப்பு" சேர்க்கக்கூடாது என்று வைத்தியர்கள் எச்சரிக்கிறார்களே!..ஏன் எதற்கு என்று நாம் அறிந்துகொள்ள வேண்டும். இரத்த அழுத்தம் உள்ளவர்களின் இரத்தத்தில் "சோடியம்" என்கிற உப்பின் அளவு அதிகமாக இருக்கும். அத்தோடு சமையல் உப்பையும் (Sodium Chloride) உணவில் சேர்த்துக்கொண்டால் இரத்தத்தில் உப்பின் அளவு மேலும் அதிகரிக்கும். இதனால் சிறுநீரகங்கள் பாதிக்கப்படும். இதனைத் தவிர்க்கவே இரத்த அழுத்தம் உள்ளவர்கள் "உப்பு" சேர்க்கக்கூடாது என்று மருத்துவர்கள் எச்சரிக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் குறுக்கெழுத்துப்போட்டி முடிவு -83
## (ஆடி - ஆவணி 2014)

| | | | |
|---|---|---|---|
| தி | ரே | சா | லை |
| ங் | வி | லை | ல் |
| க | லை | த | மு |
| ள் | னி | ன் | வு |

# சிறுவர் குறுக்கெழுத்துப் போட்டி 84
## (புரட்டாதி - ஐப்பசி 2014)

| | | | |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 |

இ – வ: –

01-04 உலக கத்தோலிக்க மக்களின் பெருநாள்.

09-12 சிலமாணவர்கள் இந்தப்பாடத்திலும் அதிகபுள்ளிகளை எடுப்பார்கள்

வ – இ: –

08-06 வில்லன் எதிர்பாற்சொல்.

15-14 இது அழிக்கப்படுவதால் மழை குறைவடையும்.

கீ – மே: –

15-07 இது ஏற்படுவதாலும் சில மாணவர் படிப்பை விட்டுவிடுவர்.

16-12 மனித உறுப்புகளில் ஒன்று.

மே – கீ: –

01-13 ஔவையார் அருளிய நூல் ஒன்று.

08-12 வேடனிடம் உள்ளது.

முடிவு திகதி: 31.12.2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வினாவிடைப் போட்டி முடிவு-157
## (புரட்டாதி - ஐப்பசி 2014)

1. இலங்கை வடகிழக்கு மாகாணத்தில் பின்வரும் தொழில்கள் நடைபெறும் ஊர்களின் பெயர்களை எழுதுக..
நெல் விவசாயம்-மட்டக்களப்பு உப்புச் செய்கை-ஆனையிறவு
மீன்பிடித்தல் - மன்னார் தானியம் மரக்கறி-வவுனியா

2. இலங்கையில் வெளிநாட்டு உல்லாசப்பிரயாணிகள் சென்றுவரும் நான்கு இடங்களின் பெயர்களை எழுதுக..
கண்டி - அநுராதபுரம்
நுவரெலியா - பொல்லநறுவை

3. ஐரோப்பாவில் டொச் மொழி பேசப்படும் 3 நாடுகளின் பெயர்களை எழுதுக.
ஜேர்மனி - ஒஸ்திரியா - சுவீஸ்லாந்து

4. ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் யூரோ பணப்புழக்கம் இல்லாத நான்கு நாடுகளின் பெயர்களை எழுதுக...
நோர்வே - இங்கிலாந்து - சுவீஸ்லாந்து - டென்மார்க்

5. ஒத்தசொற்கள் / எதிர்ச்சொற்கள் எழுதுக...

| ஒத்தசொற்கள் | எதிர்ச்சொற்கள் |
|---|---|
| அம்மா-தாய் | இருட்டு-பகல் |
| உண்மை-வாய்மை | தோற்றம்-மறைவு |
| வீடு -இல்லம் | காலை -மாலை |
| ஆடை -உடை | பகல் -இரவு |
| உணவு -சாப்பாடு | குளிர் -சூடு |

6. ஐந்து எழுத்துச் சொற்கள் ஆறு எழுதுக...
புத்தகம் விவசாயம் காலைநேரம்
வெந்தயம் உப்பளம் கிளிநொச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வினாவிடைப் போட்டி - 158
## (கார்த்திகை-மார்கழி 2014)

1. இலங்கையில் பேசப்படும் மொழிகளையும் கடைப்பிடிக்கப்படும் மதங்களையும் எழுதுக..

-------------- ----------- ---------- -----------

-------------- ----------- ---------- -----------

2. இலங்கையிலுள்ள வடகிழக்கு மாகாணசபைகளின் முதலமைச்சர்களின் பெயர்களை எழுதுக..

கிழக்குமாகாணம்-------------------------

வடமாகாணம் ---------------------------

3-ஸ்கன்டிநேவியன் நாடுகள் என்று அழைக்கப்படும் நாடுகளின் பெயர்களை எழுதுக..

------------- ------------- ---------- -------------

4. உலகத்தில் தற்போது போர், உள்நாட்டுப்போர் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நான்கு நாடுகளின் பெயர்களை எழுதுக.

------------- ------------- ------------ -------------

5. சொற்களைக் கண்டுபிடித்து எழுதுக..

இது வெள்ளை நிறம் ---------

இச்சொல்லை அன்பு என்றும் கூறலாம் ---------

பாடல்களைப் பாடுபவர் ---------

இது கசப்பான ஒரு காய் ---------

6. ஆறு எழுத்துச் சொற்கள் ஆறு எழுதுக:-

-------------- ------------ ------------

-------------- ------------ ------------

7. நீங்கள் விரும்பிய திருக்குறள் ஒன்றையும் அதன்பொருளையும் எழுதுக..

முடிவு திகதி: **31.12.2014**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் போட்டி முடிவுகள்
## (ஆடி - ஆவணி 2014)

பங்குகொண்டவர்களும் பரிசு பெறுபவர்களும்.

| | |
|---|---|
| செல்வி. நந்தனா.கனகராசா | - Monchengladbach |
| செல்வி. சாதனா.தேவானந்தராசா | - Monchengladbach |
| செல்வி. மித்திரா.ஜெகதீஸ்வரன் | - Monchengladbach |
| செல்வி. துசயந்தி.கனகராசா | - Swiss |
| செல்வி. சங்கீதா.சுகுமார் | - Holland |
| செல்வி. சாகித்தியா சண்முகரட்ணம் | - weeze |
| செல்வன். நிகேதன் சண்முகரட்ணம் | - Weeze |
| செல்வன். சாகித்தியன் சண்முகரட்ணம் | - weeze |
| செல்வன். பவிதன் அருமைத்துரை | - Weisloch |
| செல்வன். ராகுல்.கனகராசா | - Monchengladbach |
| செல்வன். ஆதவன் அருமைத்துரை | - Weisloch |

பரிசுபெறும் அதிஸ்டசாலிகள்.

| | |
|---|---|
| செல்வி. துசயந்தி கனகராசா | - Swiss |
| செல்வி. மித்திரா ஜெகதீசன் | - Monchengladbach |
| செல்வன். சங்கீதா சுகுமார் | - Holland |

**போட்டிகளில் கலந்துகொண்ட அனைத்து மாணவ மணிகளுக்கும் பாராட்டுக்களும்..வாழ்த்துக்களும்!..தொடர்ச்சியாக போட்டிகளில் பங்குகொள்ளுங்கள்!... பரிசுகளை வென்றிடுங்கள்!..**

---

**நன்றிகள்!..**

மண் சஞ்சிகையின் அட்டைப்பட கணனி வடிவமைப்பு
செல்வன் பானுஸ்கந்தா – புவனேந்திரன்
Duisburg

மண் சஞ்சிகையின் கணனி வடிவமைப்பு
செல்வன் சிவகாந்த் – சிவராசா
Duisburg



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 1 = ONDRU (ஒன்று) | - one |
| 10 = PATHU (பத்து) | - ten |
| 100 = NOORU (நூறு) | - hundred |
| 1000 = AAYIRAM ( ஆயிரம் ) | - thousand |
| 10000 = PATHHAYIRAM பத்தாயிரம் | - ten thousand |
| 100000 = NOORAYIRAM நூறாயிரம் | - hundred thousand |
| 1000000 = PATHHU NOORAYIRAM பத்து நூறாயிரம் | - one million |
| 10000000 = KOODI கோடி | - ten million |
| 100000000 = ARPUTHAM அற்புதம் | - hundred million |
| 1000000000 = NIGARPUTAM நிகற்புதம் | - one billion |
| 10000000000 = KUMBAM கும்பம் | - ten billion |
| 100000000000 = KANAM கணம் | - hundred billion |
| 1000000000000 = KARPAM கற்பம் | - one trillion |
| 10000000000000 = NIKARPAM நிகற்பம் | - ten trillion |
| 100000000000000 = PATHUMAM பதுமம் | - hundred trillion |
| 1000000000000000 = SANGGAM சங்கம் | - one zillion |
| 10000000000000000 = VELLAM வெள்ளம் | - ten zillion |
| 100000000000000000 = ANNIYAM அந்நியம் | - hundred zillion |
| 1000000000000000000 = ARTTAM அற்ட்டம் | - ?????? |
| 10000000000000000000 = PARARTTAM பறற்ட்டம் | - anybody know? |
| 100000000000000000000 = POORIYAM பூரியம் | - ?????? |
| 1000000000000000000000 = MUKKODI முக்கோடி | - ??????? |
| 10000000000000000000000 = MAHAYUGAM மகாயுகம் | - ?????? |

One of the oldest and greatest languages in the World !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பான வேண்டுகோள்!.

மண் சஞ்சசிகையில் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கும் சிறுவர் போட்டிகளான குறுக்கெழுத்துப்போட்டி, வினாவிடைப் போட்டி, கண்டுபிடியுங்கள் போட்டிகளில் பங்குபற்றும்மாணவர்களின் எண்ணிக்கைகுறைவடைந்துவருவதை வேதனையுடன் சுட்டிக்காட்டுகின்றோம் .மாணவமணிகளின்தாய்மொழிக் கல்வி,எழுத்தாற்றல், சிந்தனையாற்றல், அறிவியல் விடையங்களில் மேம்படவேண்டும் என மண்சஞ்சிகை பல ஆண்டுகளாக எடுத்துவரும் செயற்பாடுகளுக்கு நீங்கள் வழங்கிவரும் ஒத்துழைப்புக்கள் ஆதரவுகள் குறைவடைந்துவருவதால் இந்த மூன்று போட்டிகளையும் தொடர்ந்து நடத்துவதா!..என்னும்கேள்வி எழுந்துள்ளது. பங்குகொள்ளும மாணவமணிகளின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதால் போட்டிகளை நிறுத்தவேண்டிய காலகட்டத்தில் உள்ளோம். எனவே அடுத்துவரும காலங்களில் போட்டிகளில்கலந்துகொள்ளும் மாணவ மணிகளின் எண்ணிக்கை குறித்து முடிவெடுக்கப்படும். ஆகவே பெற்றோர்களும் மாணவர்களும் ஆக்கமும் ஊக்கமும் எடுத்து ஆதரவும் ஒத்துழைப்பும் வழங்கிப் பயன்படும்வண்ணம் அன்போடு கேட்டுககொள்கின்றோம்!..

ஆசிரியர்

# வெள்ளி விழா!.

உங்கள் மண் சஞ்சிகை எதிர்வரும் 2015 தை மாதம் தனது 25வது ஆண்டை நிறைவுசெய்து வெள்ளிவிழாவைக் கொண்டாடவுள்ளது. வெள்ளி விழாவையொட்டி சிறுவர் இளையோர், வாசகர்களிடையே பல வகையான போட்டிகள் இம்மலரிலே வெளியாகியுள்ளன. போட்டிகளில் கலந்து கொள்ளுங்கள். தொடர்ந்து மண் சஞ்சிகையைப் படியுங்கள். இவ்விழா பற்றிய உங்கள் கருத்துக்களை அன்போடு எதிர்பார்க்கிறோம்!...

ஆசிரியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன் மொழிகள்!..

1. ஏழையின் முகம் மலரும்போது இறைவனின் உள்ளமும் மலர்ச்சி கொள்கிறது.
2. அறிவாளிகள் மற்றவர்களின் கேடுகளிலிருந்துதான் பாடம் கற்றுக்கொள்கிறார்கள்.
3. பரந்த மனப்பான்மை உள்ளவர்களுக்கு உலகம் முழவதும்மே தன் குடும்பம்.
4. நல்ல சகவாசம் இல்லாவிட்டால் அது தொல்லைகளையே உண்டாக்கும்.
5. நீதியில்லாத வெற்றியும் பீதியில்லாத தோல்வியும் ஒன்றே.
6. அகந்தையை விட்டுவிடுபவனுக்கு கருணை தானகவே வந்துவிடும்.
7. பிறருக்கு நன்மை செய்வதே உண்மையான மகிழ்ச்சியாகும்.
8. வஞ்சகர்களுடைய மனதில் இறைவன் வசிக்கமாட்டான்.
9. நண்பனாக இருந்துகொள்..நம்பியிராதே.
10. நல்லொழுக்கம் பகைவரையும் வென்றுவிடுகின்றது.
11. துன்பகாலத்தில் துணையிருப்பவனே நல்ல நண்பன்.
12. சத்தியம் உள்ள இடத்தில்தான் மெய்யறிவு இருக்கும்.
13. கண்ணியவான்கள் நட்புப்பாதையில் முட்கள் இல்லை.
14. ஒழுக்கமான அன்பை விரும்புகிறவன் இறைவனை நேரில் காண்கிறான்.

படித்துச் சுவைத்தவர்: – செல்விகதர்சிகா.
றீத் மிஷன் – கிளிநொச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறளும் பொருளும்

## அடக்கமுடைமை

121. அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்ந்து விடும்.

122. காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்
அதனினூஉங் கில்லை உயிர்க்கு.

123. செறிவறிந்து சீர்மை பயக்கும் அறிவறிந்
தாற்றின் அடங்கப் பெறின்.

124. நிலையின் திரியா தடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது

125. எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்
செல்வர்க்கே செல்வதந் தகைத்து.

126. ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து.

127. யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பார் சொல்லிழுக்குப் பட்டு.

128. ஒன்றானும் தீச்சொல் பொருட்பயன் உண்டாயின்
நன்றாகா தாகி விடும்.

129. தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு.

130. கதங்காத்துக் கற்றடங்கல் ஆற்றுவான் செவ்வி
அறம்பார்க்கும் ஆற்றின் நுழைத்து..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறளும் பொருளும்

121. அடக்கம் ஒருவனைத் தேவர் உலகத்திற்குக் கொண்டு சேர்க்கும். அடங்காமை அருந்துன்பத்தில் ஆழ்த்திவிடும்

122. மக்களாகிய உயிருக்கு அடக்கமே சிறந்த செல்வமாகும். அதனால் அடக்கமே சிறந்த பொருளாக மனதில்கொண்டு காப்பாற்ற வேண்டும்.

123. அடக்கமே அறிவுடமை என்பதை அறிந்து நடப்பவனின் நற்பண்பு நல்லவர்களால் அறியப்பட்டு அவனுக்குப் பெருமை உண்டாக்கும்

124. தனது மனக்கருத்திலிருந்து மாறுபடாது அடங்கி நடப்பவனின் உயர்வு மலையின் உயர்வைவிட மிகப்பெரியது.

125. பணிவுடமை என்பது எல்லோர்க்கும் நல்லதே. எனினும் செல்வர்களின் பணிவுடமை மற்றொரு செல்வம் பெறத்தகுதியும் உடையதாகும்.

126. ஆமை தன்னுடைய ஐந்து உறுப்புக்களையும் தன் ஓட்டிற்குள் அடக்குவதுபோல ஒருவன் ஐம்புலன்களையும் அடக்கினால் அது ஏழ பிறவிக்கும் பாதுகாப்பாகும்.

127. மனதையும் செயலையும் ஒருவன் அடக்காவிட்டாலும் நாவை மட்டும் அடக்க வேண்டும்.. அடக்காவிட்டால் சொல், குற்றம் உண்டாகித் துன்பம் அடைவான்.


128. தீய சொல் பேசி ஒரு பொருளைப் பெற்று நன்மை அடைவதனால் பிறர் துன்பமடைவார்களானால் அவன் செய்த வேறுபல நற்செயல்களும் தீய செயல்களாகிவிடும்..

129. தீயினால் சுட்டபுண் மனதினுள் மறைந்துவிடும். ஆனால் ஒருவன் நாவினால் சொல்லும் கடும்சொல்லாகிய வடு எப்பொழுதும் மாறாது.

130. கோபத்தை அடக்கிக் கல்வியைக் கற்று கற்றவழி நடப்பவனிடம் தருமதேவதை வழி தேடி வந்துகொண்டிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருக்கலிலே...



கருக்கலிலே கண் விழித்தேன்
கானக்குயில் ஓசை கேட்டு
பூமி இருண்டு இருக்க
வானத்திலே கரு மேகம் கூடியிருக்க
சிட்டுக்குருவிகள் தாங்கிய
மரக்கிளைகளிலிருந்தே
கீச் கீச்சென கொஞ்சிப் பேசிய ஒலிகள்
காதில் வந்து கானமாய் ஒலிக்க
இளம்காலைக் குளிர் காற்று மேனியை
தொட்டுச் சிலு சிலுக்க வைக்க
காலை பொழுதின் இனிமையில்
மனம் ரசித்து நின்ற போதும்
மனதில் ஒரு சலனம் எழுந்தது
எத்தனை மொழியைக் கற்றும் பயன் என்ன?
இந்தச் சின்னம் சிறு பறவைகள் கொஞ்சிப்
பேசுவது என்ன எனப் புரியவில்லையே!
பறவைகளிடம் மகிழ்ச்சியும் ஒற்றுமையும்
இருப்பதை அந்தக் குருவிகள் பேசும்
ஓசையில் கேட்டு மனம் மகிழ்ந்தேன்
மெல்ல மெல்லக் கதிரவன் தன்
பொற் கதிர்களைப் பரப்பி
மேலெழுந்தான்!..

கவி மீனா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மானிடா !...

ஆறறிவு படைத்த மனிதன்
அவனுக்குள்ளே இருக்கும் மிருகம்
ஏழறிவு என் செய்யும் இங்கே.
மிருகம் தன் சுயரூபம் காட்டினால்.

மனிதா மனிதா மானிடப்பிறப்பரியது.
கேளடா இதை செவிகொடுத்து,
புரியுதா இது எதற்கு,
புண்ணியம் தான் அதன் கருத்து.

நல்லவை செய்ய பிறந்த மானிடா,
நன்றியுடன் விசுவாசம் காட்டவேண்டும்,
தீயவை அவை களையவேண்டும்,
தீண்டாமை இங்கே விலக்கவேண்டும்.

செம்மொழி பேசும் மானிடா!
செய்மையுடன் இருக்க பழகு,
எம்மொழி மேன்மொழி தமிழ்,
இதையும் நீ உலகிற்கு உணர்த்து.

பாரினில் பரந்து வாழும் மானிடா!
செம்மையுடன் இருக்கப் பழகு,
எம்மொழி மேன்மொழி தமிழ்,
இதையும் நீ உலகிற்கு உணர்த்து.


பாரினில் பரந்து வாழும் மானிடா!
பார்த்து உலகில் நடக்கவேண்டும்,
வேரினில் விட்ட கிளை போல.
விளாசியே உலகில் பெருகவேண்டும்.

உள்ளமதில் நீ உண்மையாக நினைத்தால் மானிடா
உலகையே கையில் ஏந்தலாம்,
பள்ளத்திலே விழுந்து விடாது
உவகையிலே மிதந்திடலாம் நீ மானிடா.

திருமதிகெங்கா ஸ்ரான்லி
ஜேர்மனி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரண்!...



பள்ளிச்சீருடையில்
எனது மடியிருத்தி
இரட்டைப்பின்னலிட்டு
இடுப்புப்பட்டியிறுக்கி
கழுத்துப்பட்டி முடிந்து
புத்தகப்பை தோளில் மாட்டி
உனை முன்னே போகவிட்டு
பின்னே இருந்து
அழகு பார்க்கும்
தந்தை மனசு எனக்கு
அப்போதும் இப்போதும்.
தலைவாரிப்பொட்டிட்டு
பிஞ்சுப்பாதங்களுக்கு
கொலுசிட்டு
புத்தாடை உடுத்தி
பொம்மைகள் செய்யும்
உந்தன்
குழந்தைத்தனத்தையே
நான் அதிகம்
நேசித்திருக்கிறேன்.
இன்னமும்
விரும்புகின்றேன்.
இருந்தும் நீ
பூப்பெய்து விட்டாய்
உந்தன் சிறுபராயம்
தொலைந்து
சமூகக்கட்டுக்குள் போனதை
என்னால் இன்னமும்
ஜீரணிக்க முடியவில்லை.
மொத்தத்தில்
இதுவொரு முரண்பாடான
உலகம் தான்.
மூடத்தை சமூக ஒழுக்கம்
என்கிறது.
அன்று போல
இன்றும் ஆன உன்
அதே அச்சொட்டுச்சிரிப்பை
"இழிப்பு" என்கிறது.
கனிந்த பேச்சை
"சத்தம்" என்கிறது.
வளைவு, நெளிவு, சுழிவு,
ஆகமொத்தத்தில்
உந்தன் நளினத்தை
"ஆட்டம்" என்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவளுக்கு!...

பெண் என்ற
இலக்கணத்தின்இரண்டாம்
பாகமாம் நீ
பெண் என்றால் இப்படி
இருக்கக்கூடாதென்ற
உதாரணத்திற்கே உரியவளா நீ!..

பாவம் பாரதி
உன்னைப் பார்த்துச்
சொல்கிறான்
புதுமைப் பெண்ணாம் நீ!..

உண்மைதான்
புதுமையான பெண்தான் நீ
புதுமையாய் ஆகிவிட்டாய் நீ!...

அன்றுதெரியவில்லைஔவைக்கு
பிழையாய்ப்பொருள் கொண்டு நீ
உடையைச் சுருக்குவாய் என்று!..

பெண்மை என்றும் கோட்டில்
இறுதியின் முடிவில் நீ
முயற்சித்துப்பார்
முன்னேற இடமுண்டு
இறுதியின் முடிவிலாவது.

அன்று நீ
பொம்மை செய்ததும்
இன்று நீ
பொம்மை ஆனதும்
உண்மையே.
வெறும் பதின்ம வயது
எந்தன் செல்லமே!

வவுனியாவிலிருந்து
தாயக கவிஞர்
ஈழம் சேகுவேரா

செல்வன்துஸ்வேந்தன்
மாணிக்கவாசகம்
திருஞானசம்பந்தர் குருகுலம்
களுதாவளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்முட்டும் கார்த்திகை!....

கார்த்திகை பிறந்தும் எம்காத்திருப்புகளோ முடியவில்லை
காத்திகை மலர்ந்து காடுநிலமெங்கும் தீபங்களின்சுடராய்
போர்ப்புகை மூட்டத்துள் பொசுங்கிச்சிதறிய உடலங்களும்
பொத்திய எண்ணகளும் பொங்கிய விம்மலுடன் வெடிக்கும்..!

ஊர்த்திருவிழா விஷேடதினங்கள் உள்ளங்களில் பெருமிதம்
உவகையூட்டும் நிகழ்வுகளெல்லாம் உதிர்ந்துபோனதுடன்
நேர்த்திகள் மாறாது நிலமெல்லாம் பூரிப்புப்பொங்கிவடிந்த
நினைவுகள் அலையாய்வந்தெம் நெஞ்செல்லாம் எரிக்கின்றது..!

தேர்த்திருவிழாக்களுடன் தெருக்கூத்து நாடகங்களென்று
திருமண ஊர்வலங்களும் தினம்தினம் கொண்டாடியதிடலில்
பார்த்திபன் திலீபனோ பசித்திருந்து வதங்கிய தவக்கோலம்
பட்டுப்போய்விடாமல் கருத்தில் பசுமையாய் படமாய்ஓடுகிறது..!

மார்க்கங்கள் மதங்களெல்லாம் மறைவொளிவு இல்லாமல்
மக்களெல்லாம் ஒன்றென்று மகிழ்ந்திருந்த என்தேசம்
நார்முடிந்து தொடுத்த சரம் நறுமணமே மாறுவதற்குள்
நடுத்தெருவிலேபோட்டு நான்காய்ப் பிய்த்தது விதிக்குரங்கு..!

தேர்க்காலில் சிக்குண்ட சின்னப்பசுக்களுக்கும் நீதியில்லை
தேசங்களின் பார்வையிலே திருத்தங்களும் தெரியவில்லை
தீர்ப்பெழுதும் தெய்வங்கள் திரும்பியின்னும் பார்க்கவில்லலை
திசைமாறிய எம்முறவுகளும் தேக்கத்துடன் வாழும்நிலை


சூர்ப்பனகைகளும் சகுனிகளும் சூதுவிளையாட்டினில்வென்றால்
சூதுவாதறியாதுசிதைந்த சொந்தக்களுக்கு எங்ஙனம்நீதிகிட்டும்
ஆர்ப்பரிக்கும் வங்கக்கடலோ அதன்தீர்ப்பைப் பதிவுசெய்யும்
அகிலத்தில் நீதிவென்று அன்னைமண்ணை மீட்டுத்தரும்..!

அம்பலவன்புவனேந்திரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண் சஞ்சிகை இதழ் 167-அட்டைப்படக் கவிதை




வண்டாடும் மலர்களின் வடிவொத்தே புன்னகைத்தாய்-எமது
வாழ்வின் வலிகள்நீக்கிட வழிவெடுத்தே வருகைதந்தாய்
திண்டாடும் மனிதகுலத்திற்கு தீர்ப்பெழுதும் நம்பிக்கை
தீபங்களாய் ஔிர்கின்ற தீட்சணயமாய் விழிகளினிருக்கை..

கொண்டாடும் உலகினிற்கு குளிர்நிலவாய்ப் புன்னகை-உயர்
கோபுரத்துக் கலசமெனக் குவிந்திடுகின்றதே உன்கை
வந்தாடும் தென்றலைப்போல் வருடுகின்ற உன்ஸ்பரிசம்
வரமளித்து வாழ்வளித்திட வளமானதே எம்வாழ்க்கை..

கண்டங்கள் பலதாண்டி கல்கத்தாவில் வேர்விட்டாய்-பெரும்
கருணையின் விருச்சமாய் கனிந்த கற்பகதருவானாய்
நின்றாடும் நினைவுகளில் நிலைத்துநிற்கும் புவியினை
நிமிர்ந்துபார்க்க வைத்துச்சென்ற நிஜமான கன்னித்தாய்..

அண்டத்தில் அழகான இந்தஅகிலத்தைப் புதுப்பித்து-பல
ஆதரவற்றோரை அரவணைத்து அன்பான அன்னையாய்
சென்டாலே உன் அடியினைச் சேவித்துத் தொழுகின்றோம்
சேய்களெம் சிந்தையுள் சின்னஜோதியாய் ஔிர்ந்திடுவாய்..!

அம்பலவன்புவனேந்திரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரங்குமனம்!..


(கவி மீனா – ஜேர்மனி

நாம் ஊரிலை இருக்கும் வரை
அப்பிள் சாப்பிட ஆசைப்பட்டவர்கள்
எல்லாம் வெளி நாடு வந்த பின்பு
பலாப்பழத்தையும் மாம்பழத்தையும்
தான் தேடி அலைகிறார்கள்.
அன்று மிக்ஸி வாங்கினால் சுகமாக
சம்பல் அரைக்கலாம் என்று
ஆசைப்பட்ட பெண்கள் எல்லாம்
வெளிநாட்டிலே மிக்ஸி யெல்லாம்
சமையல் கட்டிலை இருந்தாலும்
உரலிலை இடிச்ச சுவையான
சம்பலை எண்ணி நாவுறுகொண்டே
வாழகிறார்கள்.
இது எல்லாம் ஏன் சொல்லுகிறன்
என்றால் எதுவும் கைக்கு எட்டாத
வரைக்கும்தான் ஆசையாக
இருக்கும், எதுவும் கைக்கு
எட்டியதும் அதன் மேல் உள்ள
ஆசையும் மதிப்பும் மனிதர்களுக்கு
போய்விடுகிறது.
இதுதான் பொதுவான மனித
இயல்பு, இதனால்தான் மனித
மனம் ஒரு குரங்கு என்று
பாடினார்களா?
இதை போலேதான் வாழ்க்கையில்
காதலும் சிலருக்கு எட்டாத
வரைதான் அழகாக அருமையாக
தோன்றுகிறது, அது கிட்டி விட்டால்
அதன் மதிப்பும் அதன்மேலுள்ள
ஆர்வமும் நாளுக்கு நாள் தேய்ந்து
போய் விடுகிறது.
காதலிக்கும் போது காதலி
கிடைப்பாளா? கிடைக்காமல்
போடுவாளா? என்று எண்ணி
எண்ணித் தூக்கமின்றிக் கழித்த
இரவுகள் யாவும் காதலி
மனைவியாகிச் சில நாட்களிலேயே
மறந்து ஏதோ ஒரு தேவையற்ற
பொருளை தேடிப் பிடித்தவிட்டோமோ
என்ற சலிப்போடு மனம் தள்ளிப்
போகிறது காதலியை விட்டு அவள்
காதலை விட்டு.
சிலரது வாழ்க்கை இப்படியே
சின்னா பின்னமாகி விடுகிறது
இதற்குக் காரணம் அவர் அவர்
மனம்தான், பழகப் பழக பாலும்
புளிக்கும் என்பது பழமொழி இதைச்
சும்மாவா சொல்லி வைத்தார்கள்
பெரியோர்கள் அன்று?
பொன்னையும் பொருளையும்
பொத்திப்பொத்தி வைக்கும் மனித
மனங்கள், தேடி அலைந்து
எடுத்த பூவையரை மட்டும்
பொன்னாக ஒரு பெண்ணாக ஒரு
விலையுயர்ந்த தன் துணையாகப்
போற்றிப் பாதுகாக்க முடியாது வீசி
எறிகிறார்கள்?
அழியாத அசையாத சொத்துக்கு
இருக்கும் மதிப்பு அழிந்து
போகும் இந்த உடலுக்கு இல்லை
என்பதாலா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கை மாறி மாறிப் போகும்
பணத்தின்மேலுள்ள தீராத ஆசை
கைமாறிப் போகாமல் தனக்காக
காத்திருக்கும் கட்டிய மனைவியிடம்
ஏன் வருவதில்லை இந்த ஆண்
குலத்துக்கு?
எதுவும் கைக்கு எட்டியதும் கசந்து
போகுது மனித மனத்துக்கு
ஆனால் பொன்னும் பணமும்
மட்டும் சேரச் சேர ஆசை கூடுகிறது
மனித இனத்துக்கு.
எட்டாத தூரத்தே எட்டிப் பிடிக்குது
மனம் எட்டிப் பிடித்தபின்னே எட்டி
உதைக்குது சில குரங்கு மனம்.
நிலா கூட வானத்தில் எட்டாத
தூரத்தே இருக்கும் வரைதான்
அழகாக தோன்றுகிறது கவிஞர்கள்
கண்ணுக்கு அதுவும் கைக்கு
எட்டிவிட்டால் வெறும் கல்லும்
மண்ணுமாக போய்விடுமே!....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதனைக்கு வயதில்லை...

உலகில் அரிய பல சாதனைகள் புரிந்தவர்களை நோக்கும்போது வயது ஒரு காரணமாக அமையவில்லை என்பது உண்மையானவிடையமாகும். எந்த வயதிலும் சாதனைபுரியலாம் என்பதைப் பல சாதனையாளர்கள் இந்த உலகிற்கு எடுத்துக் காட்டியுள்ளனர். விடாமுயற்சி, மனஉறுதி, கடினஉழைப்பு தொடரான போராட்டங்களின் பின்பே பல சாதனைகள் உலகில் படைக்கப்பட்டிருப்பதை நாம் அறிவோம்.

ஆகவே எந்தக் காரியத்தையும் செய்யும்போது முடியும் இயலும், வெற்றி கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் நாம் செயற்படும்போது வெற்றிக்கனியை நாம் எட்டிப்பிடித்துவிடலாம்.

இப்படத்தில் காணப்படும் வயதான மூதாட்டி பற்றியதாக அமைகின்றது. 2015 மே மாதம் 6ம் திகதி தனது 100வது வயதை எட்டிப்பிடிக்கும் அமெரிக்க வாசியான லிலியான் வேபர் (Lilian Weber)

அவர்களைப்பற்றியதாகவே இக்குறிப்பு அமைகின்றது. ஆபிரிக்காக் கண்டத்தின் வறுமைப்பட்ட மக்கள் மற்றும் ஆதரவற்ற சிறுவர்கள்மீது பற்றுக்கொண்டு தன்னால் இயன்ற உதவிகளைத் தொடர்ந்து செய்துவருகின்றார். அவரது திட்டம் ஒவ்வொருநாளும் ஒரு சட்டை தைத்து முடித்து அதை மேற்குறிப்பிட்ட பிள்ளைகளுக்கு அனுப்புவதாகும். இப்படியாகச் சட்டைகளைத் தைத்து ஆபிரிக்க நாடுகளுக்கு அனுப்பிய சட்டைகளின் எண்ணிக்கை 900 கடந்துவிட்டது. எதிர்வரும் 2015 மே மாதம் 6ம் திகதி அதாவது தனது 100வது பிறந்த நாளுக்கு 1.000 சட்டைகள் தைத்து அனுப்பவேண்டும் என்பதே அவரின் திட்டமாக இருந்து செயற்பட்டுவருகின்றார். அவரின் மனத்துணிவும் விடாமுயற்சியும் கைகொடுக்க இவரால் தைக்கப்பட்ட சட்டைகள் அனைத்தும் பாடசாலைகள், ஆதரவற்றோர் நிலையங்கள், தேவாலயங்களின் உதவிபெறும் பிள்ளைகளுக்கு விநியோகிக்கப்படுகின்றன. தள்ளாத வயது நூறாவது வயதை எட்டிப்பிடிக்கும் வயது. இந்த வயதிலும் இவரது நோக்கம், கடினஉழைப்பு, விடாமுயற்சி, சாதனைகளை எண்ணிப் பார்க்கையில் வியப்பாக இருக்கின்றதல்லவா!..போற்றுவோம்.. வாழ்த்துவோம் இந்தப் பாட்டியை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எனவே இதிலிருந்து நாம் ஒரு விடையத்தைப் புரிந்துகொள்ளலாம். ஒவ்வொருவரும் சாதனை புரிவதற்கு வயது எந்தவிதத்திலும் தடையில்லை என்பது நிரூபிக்கப்பட்டிருப்பதை நாம் அறிந்துகொள்ளலாம். ஆகவே நாம் இந்த உலகத்தில் வாழ்ந்து முடிப்பதற்குள் ஏதாவது ஒரு சிறு சாதனையாவது புரிந்துவிடவேண்டும்.. நமது நோக்கம், செயற்பாடு, மனஉறுதி, கடின உழைப்பு போன்றவற்றைக் கையில் எடுத்துச் செயற்படுவோமானால் எந்த முடியாத காரியத்தையும் இலகுவாக முடித்து வெற்றி பெறலாம். இதை விடுத்து முடியாது, இயலாது, சாத்தியமாகாது என எண்ணிக் காரியங்களில் ஈடுபடுவோமானால் எதுவுமே கிடைக்காமல் போய்விடும். பிறந்தோம், உண்டோம், மடிந்தோம் என எந்தவித பிரயோசனமும் இல்லாமல் வாழ்ந்து முடிந்துவிடும். ஆகவே இந்தப் பாட்டியின் துணிவையும் செயற்பாட்டையும் நாம் மனதில் நிறுத்திச் செயற்படுவோமானால் வாழ்வில் வெற்றிபெற்றுவிடலாம். நாம் கற்றதை, நம்மிடமுள்ளவற்றைப் பிறருக்குக் கொடுத்து வாழ்வோமானால் அதுவே நமக்கு மிகப்பெரிய சந்தோஷத்தையும் புகழையும் தந்துவிடும்!.. நாமும் முயன்றிடுவோம்!..துணிந்து செயற்படுவோம்!..

சிவா
ஜேர்மனி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணியதை எண்ணியபடி எழுதுகிறேன்...

ப. பசுபதிராசா-ஜேர்மனி

இது மார்கழிமாதம் சார்ந்த நிகழ்வுகளும் இன்னும் சம்பிரதாயச் சடங்குகளுக்கும் கொண்டாடக் கோலாகலங்களுக்கும் குறைவற்ற மாதம். அதிலும் புனிதன் யேசுகிறிஸ்த்து அவர்களின் பிறப்பை நினைவுகொள்ளும் நத்தார், புதுவருடப்பிறப்பு என்று உலகம் முழுவதும் மனங்கவரும் வைபவங்களும் இந்து சமயத்தின் சார்பாக திருக்கோவில்களின் வழிபாடு, திருவெம்பாவை அனுஷ்டானம் என்று எண்ணற்ற ஆத்மீக வழிபாடுகளோடும் கொண்டாடப்படும் மாதமாகும். தமிழர்களின் பகுத்தறிவுச் சிந்தனைச் சூரியனாக வந்து உதித்து வாழ்ந்து வளம் சேர்த்த தந்தை பெரியார் என்று தமிழ்ப்புரட்சிகர விரும்பிகளால் உச்சந்தலையில் வைத்துக் கொண்டாடப்படும் பெருமகனின் நினைவோடும், தமிழக திரைவானிலும் அரசியல் வானிலும் தன்னிகரற்ற தலைவனாய் விளங்கிய எம்.ஜி.இராமச்சந்திரனின் அமரத்துவ நாளும் இந்தமாதம் நம் நினைவுகளில் வந்து நிற்கும்.

மார்கழி மாதத்திற்கு அழகுசேர்ப்பவை யேசுபிரான், தந்தை பெரியார், எம்.ஜி.ஆர் என்ற சமூகவிரும்பிகள் அனைவரும் இச்சமூகம் கொண்டிருந்த மதம் சார்பான கடினமான பாதைகளைக் கண்டித்தவர்கள் என்பதில் கிட்டத்தட்ட உடன்பாடுடையவர்கள்தான். ஐயகோ ஆண்டவரான யேசுகிறிஸ்துவோடு மற்ற இருவரையும் ஒப்பிட்டுவிட்டானே மாபாதகன் என்று என்னை மதவாதிகள் திட்டினாலும் உண்மை இதில் உண்டு என்பதை இவர்களை அறிந்த யாவரும் மறக்கிலர். மனிதனுக்கு மனிதன் பரிமாறிப் பகிர்ந்துகொள்ள வேண்டியது அன்பு என்ற அரும்பெரும் ஆத்மஜோதி என்பதை தவறவிட்டுவிட்டுத் தன் தெய்வம் உன் தெய்வம் என்தெய்வம் என அடிபட்டுக்கொள்ளும் மதப்பிரிவுகளும், பிளவுகளும் மனித சமூகத்தை சரியான திசைக்கு இட்டுச்செல்ல முடியாது என்பதை சொன்னதில் இவர்கள் மூவரும் பங்காளிகளே.

சமூகத்தில் சாதிபேதங்களை உருவாக்கி அதற்கு மதத்தைத் துணைக்கு அழைத்து நியாயப்படுத்தி உயர்சாதியினர் என்று கூறுபவர்கள் குறைவானசாதி என்று சொல்லப்படுபவர்களை நசுக்கி அடக்கி ஒடுக்கி அழிக்கும் நிலமை கண்டு கொதித்த தந்தை பெரியார் அதற்குக் காரணமாகக் கூறப்படும் கடவுளிடம் இப்படி வேண்டினார்." கடவுள் இருப்பது உண்மை எனில் இப்படிக் கொடுமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழ்ந்த உலகை ஒரு எரிமலையாலோ ஒரு இயற்கை அனர்த்தத்தாலோ அழித்துவிடாது பார்த்துக் கொண்டிருப்பாரானால் அந்தக்கடவுள் இவ்வுலகத்திற்கு தேவையில்லை!" என்றார். இவை போன்ற கருத்துக்களைத் தன் இனிய சினிமா உலகம் ஊடாக எம் ஜி.ஆர் அவர்கள் தொட்டுக்காட்டாத இடங்களே இல்லை. கடவுள் இருப்பதாகவோஅல்லது கடவுள் வேஷங்களையோ அவர் தன் திரைப்படங்களில் நடித்தது இல்லை. "கடவுள் ஏன் கல்லானார் கல்லாய்போன மனிதர்களாலேயே" என்று மனிதரின் தவறுகளே அனைத்துப் பிரச்சனைகளுக்கும் மூலகாரணம் என்பதை உறுதி செய்து "ஓம்முருகா என்று சொல்லி உச்சரிக்கும் சாமிகளே உருத்திராட்சைப் பூனைகளைப்போல் வாழறீங்க, சீமான்கள் போர்வையிலே சாமான்ய மக்களையே ஏமாற்றிக் கொண்டாட்டம் போடுறீங்க" என்று மனிதனின் மடமைகளை அவர் தொட்டுக்காட்டும் இடங்கள் இப்படி ஆயிரம் உண்டு. இன்னும் மேலேபோய் படைத்தவன் பெயரால் இந்த மனிதன் செய்யும் பாழாய்போன விடையங்களையும் சுட்டிக்காட்டினார். உண்மையில் யேசுக்கிறிஸ்த்து பொதுவுடமைச் சிந்தனைகளை உலகிற்குச் சொல்லவந்த ஒரு போராளி. சொத்துடமையை

முதன்முதலில் எதிர்த்த
சமத்துவத்தின் முன்னோடி.
அவரைத் தெய்வப் பிள்ளை
என்று சொல்வதும் அதிசயமாகத்
தோற்றுவிக்கப்பட்டவர்
என்பதும் புனைகதை. அவர்
தச்சுவேலைசெய்த தொழிலாளி. தன்
பிரசாரங்களில் பொதுமக்களிடையே
தீப்பந்துங்களைக் கொழுத்தி
ஒளியூட்டி தன்போதனைகளை
மக்களிடம் கொண்டு சென்றார்.
அவர் தெய்வமகனாக
இருந்திருந்தால் என் தந்தையே
இங்கே ஒளி ஏற்றிவிடும் என்று
சொல்லி இருக்க மாட்டாரா!..
அலைகளின்மேலே நடந்து
காட்டியவரெனில் சிலுவை
அவருக்குச் சுமையாக சீமோன்
சேர்ந்து உதவிசெய்ய வேண்டிய
தேவை இருந்திருக்காது.
தாசிப்பெண்ணின் மீதான நீதியை
அவர் சமூகத்திடமிருந்தே பெற்றார்.
எல்லாப் பாவங்களும் நிறைந்து
அவர் வாழ்ந்த காலங்களே
அவரை நியாயவாதியாக
நிர்ப்பந்தித்தது. முரடர்களும்
மூக்கர்களும் முட்டாள்களும்
நிறைந்திருந்தபடியால்
தனிமனிதனாக நின்றவருக்கு
அறியாமை இருள் போக்க அன்பே
ஆயுதமாகக்கொள்ள அவரை
நிலமை நெருங்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரிகளை மன்னிப்பதே
மறுமலர்ச்சிதரும் என்ற அவர்
மார்க்கம் அது .அவர் காலத்தில்
மட்டும் சாத்தியமாகியது
சரித்திரமானது.மக்கள் வருத்தம்
என்னவெனில் சமூகத்தில் மக்கள்
அனைவரும் இணைந்துவாழும்
சூழ்நிலையை உருவாக்கவில்லை
என்பதே. தைப்பொங்கல் பொங்கி
ஒரு இந்து வீட்டிலிருந்து
கிறிஸ்த்தவ வீட்டிற்குப் போகலாம்.
ரம்ழான் முடித்து சமையல்
விஷேடங்கள் ஒரு இந்து
வீட்டிற்கு வரலாம். ஆனால் ஒரு
இந்துவும் ஒரு இஸ்லாமும்
காதலித்துவிட்டால் இரு வீட்டிலும்
மரணம்தான் பரிசாக வரும்.

இப்படியாக மூர்க்கத்தனமான
அச்சுறுத்தலும் அறியாமையும் சமூக
அதிகார வர்க்கத்தின் கைகளிலே
மதமும் ஒரு ஆயுதமாக
எச்சரித்துக்கொண்டிருப்பதை
மறுப்பவர் எவரும் இருக்கமுடியாது.
ஆக அனைவரிடமும் அன்பு காட்டு
என்பது இறைவனின் வாசகமாக
அன்றாடம் கோவிலுக்குள்
மசூதிக்குள் தேவாலயத்துக்குள்
போதிக்கப்படும்போது அது
மனிதனின் இதயத்திற்குள்
செல்லவில்லை என்பதே மதத்தின்
தோல்வியாகும். அதுமட்டுமல்ல
அகில உலக நடைமுறைகளை
நாம் கவனித்தால் தினமும்
உலகில் பாதி நிலப்பரப்பு
விரோதத்தின் விளைநிலமாக,
இரத்தக்காடாக, பல லட்சம் மக்கள்
கண்ணீருடனும் கம்பலையுடனும்
அநாதரவாய்ப் போவதற்கு
மதங்களும் காரணமாகும்.

உலக அதிகார வர்க்கத்தின்
ஆட்சிமதமாகக் கிறிஸ்த்தவமும்
அதன் அராஜகத்தை நேரடியாகவும்
பயங்கரவாதத்தின் வடிவாகவும்
தட்டிக் கேட்பவராக, இஸ்லாமிய
மதமும் தம்மை இரத்தத்தின்
நடுவே இனங்காட்டுகின்றன.
இவ்வாறு பல உயிர்கள் மதத்தின்
பெயரால் உயிர் இழப்பதை
கடவுளின் கட்டளையாக
எப்படிப் பார்க்க முடியும். இந்து
சமயத்தைத் தழுபுபவன் இன்னொரு
இந்துவை தீண்டத்தகாதவன்
எனப்புறந்தள்ளுகிறான். ஒரே குர்
ஆனை வேதமாகப் போற்றும்
இஸ்லாமியன் தன் சகோதரனை
கொலை செய்கின்றான்.
கோவிலுக்குள் பாதிரியாரின்
போதனைகளைச் செவிமடுக்கும்
கிறிஸ்தவன் வெளியே வந்து
வேறொன்றைச் செய்கிறான்.
இதுதானே இன்றைய சமூக
நடைமுறையாக மாறிவிட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால்தான் மதம் ஒரு
அபின் என்றார் கார்ல்
மார்க்ஸ். அதை உண்பவன்
மதம்பிடித்து அலைவான்.
எல்லோருக்கும் பொதுமறை
சொல்லும் திருக்குறளை யாரும்
கண்டுகொள்வதில்லை. எல்லோரும்
சமத்துவமாக வாழவேண்டும்
என்ற சோஷலிஸத் தத்துவத்தை
ஒழித்துக்கட்டுவதிலேயே தனிநபர்
முதலாளித்துவ சிந்தனை
முந்திக் கொள்கிறது. தெய்வம்
பல சொல்லிப் பகைத் தீயை
வளர்ப்பவர் மூடர் என்று மதத்தின்
தாக்கம் குறித்துப் பாரதி கவிதை
யாத்தும் மதத்துக்குள் மனிதன்
மனம் மழுங்கிட முண்டியடிக்கிறான்
என்பதுதான் நாம் என்றும்
கண்டுகொண்டிருக்கும் மதம்
படுத்தும்பாடு மாற்று இல்லாது
வேண்டும்.

உண்மைகளைப் பதிவு செய்து
நம் வரலாறுகள் சொல்லும்
வழிகளை நாம் தொலை
நோக்கிப் பார்க்கமுடியவில்லை
என்றால் நாளைய வரலாற்றைப்
படைக்க முடியாது என்பதே நம்
வருத்தம். தமிழ்ச்சமூகத்தில்
மதம் முற்றாகக் களைந்து
எறியப்படவேண்டும். ஏனெனில் அது
மனிதசமூகத்திடையே மாபெரும்
திரிபுநிலை கொண்டுள்ளது. திக்குத்
தெரியாமல் நாம் சிதறிப் பயணம்
செய்ய மதம் உதவுவதுபோல்
வேறு எதுவும் இல்லை.
குறிப்பாகச் சுட்டிக் காட்டுவதாயின்
புலம்பெயர்ந்து வந்த தமிழ்மக்களின்
பாரிய மதமாற்றத்தின்
எத்தனிப்புக்குள் முடங்கிக்
கிடக்கும் முடமான நியாயங்கள்
ஏராளம். உயர்ந்தவர்கள்
தாழ்ந்தவர்கள் என்ற சாதிய
வேறுபாடுகளால் தமிழ் சமூகத்தில்
உயர்ந்தவர்கள்தான் கடவுளால்
ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் என்ற
பேரில் நசுக்கப்பட்டவர்கள்
சுதந்திரமான கிறிஸ்த்தவ
வழிபாட்டு முறைகளை இலகுவாக
உள்வாங்கியது மட்டுமல்ல
அவர்களை மதபோதகர்களாக
வரக்கூடிய அதிரடி வாய்ப்பை
கிறிஸ்தவம் வழங்கியதால் குடும்பம்
குடும்பமாக மதம் மாறியவரும்
சம்பவங்கள் இந்து மதத்தின்
தோல்வி என்றே கூறலாம்.

அதிலும் துயரம் தொங்கும்
இன்னோர் சுரண்டலாதிக்கத்தின்
பொய் முகங்களையும்
நாம் இனங்கண்டுகொள்ள
தலைப்பட்டோம். அது எவ்வாறு
எனில் இலங்கையில் பல
கோவில்களை தம் கட்டுப்பாட்டில்
வைத்து ஆதிக்கம் செலுத்திய
உயர்சாதிக்காரர் என்று
சொல்லப்படுபவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலம்பெயர்ந்து வந்து புலம்பெயர் நாடுகளிலுள்ள மதச்சலுகைகளை உணர்ந்து தாம் வழிபட்டுவந்த இந்துமதத்தை முற்றாக நிராகரித்துவிட்டு கிறிஸ்த்தவ மதப்பிரிவுகளுக்குள் தம் வசதிக்கேற்ப புகுந்துகொண்டு சாத்தான்களாகப் புதியவடிவம் எடுத்து இங்கே ஒன்றும் அறியாத பாமரர்களைத்தேடிப் பிடித்துக்கொடுத்து சலுகைபெறும் சண்டாளர்களாக மாறியுள்ளனர். அங்கு இந்து மதத்தால் தீண்டப்படாதவர்களாக கருதப்பட்டவர்களைப் பார்த்து உங்கள் கடவுளான சிவன் என்ற பிரசாரங்களைச் செய்து தம் வயிற்றையும் வாழ்வையும் நிரப்பும் சுரண்டல ஆதிக்கத்தை மீண்டும் செய்ய ஆரம்பித்திருப்பது அழியப்போகும் சமூகத்தின் ஆரம்ப அறிகுறி என்பதைச் சொல்லாமல் விடுவது சமூகத்திற்குச் செய்யும் அறிவுத்துரோகமாகும்....

---

## தகவல்கள்....

அவுஸ்திரேலியாவில் இறந்த ஒருவரின் இதயத்தை எடுத்து வேறொருவருக்குப் பொருத்தி வைத்திய உலகில் புதிய சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது.

உலகில் தற்போது சுமார் 10 மில்லியன் மக்கள் நாடற்றவர்களாகக் காணப்படுகிறார்கள் என ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் பிரிவு அறிவித்துள்ளது.


தற்போது எபோலா நோயால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 11.000 பேரைக் கடந்துள்ளதாகவும் 5.200 பேர்வரை இறந்துவிட்டார்கள் எனவும் உலக சுகாதார தாபனம் தெரிவித்துள்ளது.

-உலகம் முழுவதும் தற்போது சமார் 805 மில்லியன் மக்கள் பசிபட்டினியோடு வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள் எனவும் ஆபிரிக்காக்கண்டத்திலுள்ள சில நாடுகளின் தினமும் ஆயிரக்கணக்கானோர் இறப்பதாகவும் உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது.

-உலகம்பூராவும் தற்போது சுமார் 11 மில்லியன் எயிட்ஸ் நோயாளிகள் காணப்படுகிறார்கள் என உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஏன் என்று கேட்காதுவிட்டால், மடையர் நாம் என்று காட்டிவிடும் அறிவு. நாம் ஆறறிவு மனிதர்களா? இல்லையெனில் 5 அறிவு மிருகங்களா? என்று புரியாது போய்விடும். மிருகங்கள், பறவைகள் பலவற்றின் குணநலங்களை எடுத்தாராயும்போது அவையே தம் வாழ்வுக்குத் தேவையான அறிவு கொண்டிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. தலையாட்டித் தொடரும் ஆட்டு மந்தைகள் போல் வழிவழியாகத் தொடரும் பழக்கவழக்கம் என்றோ, ஊரோடு ஒத்தோடாவிட்டால், சமூகம் எம்மை ஒதுக்கிவிடும் என்றோ, ஆச்சரியமானதாக இருக்கின்றது என்றோ, எல்லோரும் ஏற்றுக் கொள்ளுகின்றார்களே! அதில் ஏதோ உண்மை இருக்கும் என்றோ எதையும் நம்பிவிடக்கூடாது.

அன்றே உலகப்பொதுமறை தந்து முக்காலத்தையும் ஒன்றே முக்கால் வரிகளால் அளந்த வள்ளுவர் பகுத்தறிவு காடடிவிட்டார்.

"எப்பொருள் யார்யார்வாய்க்
கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவர் சொன்னாலும் அதன் உண்மைப்பொருளைக் காணவேண்டும் அதுவே அறிவு.

"எப்பொருள் எத்தன்மைத்து
ஆயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு"

எந்தப்பொருள் எந்த இயல்பினதாகத் தோன்றினாலும் அந்தப்பொருளின் உண்மையான இயல்பை அறிவது அறிவு.

"'ஐயுணர்வு எய்தியக் கண்ணும்
பயமின்றே மெய்யுணர்வு
இல்லாதவர்க்கு"

உண்மையைக் கண்டறிந்து ஆராய்ந்து தெளிவடையாதவர்கள், தம் ஐம்புலன்களையும் அடக்கி எத்தகைய துறவு வாழ்க்கையில் வெற்றி கண்டிருந்தாலும் அதனால் அவர்களுக்கு எந்தப் பயனும் இல்லை. எனப் பகுத்தறிவைப் போதித்துப் போனார்.

"யார் சொன்னார், எவர் சொன்னார் என்பதை விட்டுவிட்டு எவர் சொன்ன சொல்லையும் உனது சொந்த அறிவால் எண்ணிப்பார்" என்று சாக்ரடீஸ் சொல்லியிருக்கின்றார்.

இவ்வாறு உண்மைத் தன்மையை அறிவது மட்டுமல்ல எமது கடமை. அதை அறியாதவர்களுக்கு அறியச்செய்வது ஒவ்வொருவரதும் கடமையாகின்றது.

"கொல்லா நலத்தது நோன்மை
பிறர்தீமைசொல்லா நலத்தது சால்பு"

தவம் என்று சொல்லப்படுவது கொல்லாத நலத்தை அடிப்படையாகக் கொண்டது. சால்பு என்று வள்ளுவர் கூறிவிட்டார் என்பதற்காக அவர் கூறிய

"எப்பொருள் யார்யார்வாய்க்
கேட்பினும்" என்னும் குறளை நாம் மறந்துவிடக்கூடாது. தீமை கண்டு குற்றங்களையாது எடுத்துச் சொல்லித்திருத்தாது. போனால்போகட்டும் என்று நாம் வாழ்ந்தோமேயானால், வாழிடச் சாக்கடையுள் நாமும் புரண்டே எழவேண்டியவர்கள் ஆகிவிடுவோம்.

வால்மீகியின் ராமாயணத்திலும் உலகாயுதக் கொள்கை பற்றிக் கூறப்பட்டுள்ளது. அக்காலத்திலேயே கடவுள் மறுப்புக் கொள்கை இருந்திருக்கின்றது. பார்ப்பனருக்குரிய எவ்வித சடங்குகளும் கடைப்பிடிக்காத ஜாபாலி என்னும் அந்தணர் தசரதர் அவையில் இருந்திருக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசிட்டர் நல்ல நாள் குறித்துக் கொடுத்தும் அந்நாளில் முடி சூட்டு விழா நடைபெறாது. ராமன் காடு செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டத்தை ராமனுக்கு எடுத்துரைத்து, நல்லநாள், கெட்ட நாள் என்பதெல்லாம் இல்லை என்று பகுத்தறிவு போதித்துள்ளார்.

பகுத்தறிவு என்பது பொருட்கள், நிகழ்வுகளின், கருத்துக்களின் கூறுகளை அவதானித்து ஆய்ந்து அவற்றின் இயல்புகளில் இருந்து ஆதாரபூர்வமாக புறவய நோக்கில் நிரூபிக்கக்கூடிய முடிவுகளை முன்வைக்கும் வழிமுறையையும், அதை ஏதுவாக்கும் மனித அறிவு ஆற்றலையும் குறிக்கின்றது. மெய்ப்பொருளை அல்லது உண்மையைக் கண்டறிவது என பகுத்தறிவு பற்றி விக்கிப்பீடியா எடுத்துரைக்கின்றது. பெரியார் அறிவு எனப்படுவதே பகுத்தறிவுதான் என்கிறார்.

சைவசமயத்தில் சந்தேகம் தோன்றியபோதே சைவசித்தாந்தம் தோன்றியது. இவ்வாறு சந்தேகங்கள் தோன்றும் போதே அவற்றுக்கான தெளிவும் ஏற்படுகின்றது.

2500 ஆண்டுகளுக்கு முன் தோன்றிய புத்தர் "கடவுளாவது ஆத்மாவாவது இவையெல்லாம்

சுத்தப்புரட்டு. எதையும்அறிவு கொண்டு சிந்தித்துப் பார்த்து புத்திக்கு எது சரியென்று படுகின்றதோ அதை ஏற்றுக்கொள்ள வேண்டுமேயொழிய கடவுள் சொன்னார் முன்னோர்கள் சொன்னார்கள் என்பதற்காக ஏற்றுக் கொள்ளாதே. வெகுகாலத்திற்கு முன் சொல்லப்பட்ட கருத்தாயிற்றே. வெகுகாலமாகப் பின்பற்றிவந்த கருத்தாயிற்றே என்பதற்காக ஏற்றுக்கொள்ளாதே.அறிவு கொண்டு அலசிப்பார் எது உன்புத்திக்குச் சரியென்று படுகிறதோ அதனை ஏற்றுக்கொள்!.. என்று அறிவைப் பயன்படுத்த வேண்டிய அவசியத்தைக் கூறியுள்ளார்.

பகுத்தறிவுக் கொள்கை அக்காலப் புலவர்களின் பாடல்களில் காணப்படுவதைப்பார்க்கின்றபோது

18ஆம் நூற்றாண்டிலே வாழ்ந்த சீர்காழி அருணாசலக்கவிராயர் நாடகத்தமிழுக்கு உயிரளித்தவர். இவர் சிந்திக்கப்பல பாடல்களை யாத்துள்ளார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மிகப்பட்ட வெம்பசியால்
வெம்பருந்தின் வாயில் அகப்பட்ட
கோழிப்பார்ப் பானேன் - நகப்பட்ட
கல்லையோ கைதொழுதேன்
காகமணு காமலையில்
இல்லையோ ரத்னகிரியே"

அளவுகடந்த பசியால் மிகக் கொடிய பருந்தின் வாயில் கிடைத்த கோழிக்குஞ்சு போலானேன். யான் கல்லையா கடவுள் என்று கும்பிட்டேன். இல்லையே காகமும் அணுகாத இரத்னகிரி மலையை அல்லவா நானும் வணங்கினேன். அந்த ரத்னகிரி போன்ற சிவன் இப்போது இல்லையோ என்று கேட்கின்றார். இலங்கை முள்ளிவாய்க்காலிலே மொத்தமாய் உயிர்கள் பறிக்கப்பட்ட போதும் இதேபோன்ற கேள்வியே பலர் மனதுள் கேட்கப்பட்ட கேள்வியானது. இல்லையோ என்னும் அச்சம் தோன்றும் போதே இருக்கிறதா என்ற கேள்வியும் எம்மத்தியில எழுகின்றது.

"வெண்ணெயுற்று நெய்தேட
வேண்டுமா தீபமுற்று

நண்ணு கனறேட னன்றாமோ "
என்மனத்தை
நாடிச் சிவனிருக்க நாடாமனூ
ர்தோறும் தேடித் திரிவதென்ன
செப்பு?

உள்ளமே உனக்கென்ன பேதைமை? வெண்ணெய் கையிலிருக்கும் போது நெய்யைத் தேட வேண்டிய அவசியமென்ன? விளக்கு இருக்கும்போது அனலைத் தேடிப்பிடிக்க முனைவது சரியா? என்மனதை நாடிச் சிவன் இருக்கும்போது அவனை அகத்துள் பார்க்காமல் ஊருராய்ச் சென்று கோயிலுக்குள் சென்று பார்ப்பதும் ஏன்? அதற்குக் காரணம் கூறு எனத் தன் பாடலில் சிந்திப்பதாய் வரிகள் தந்திருக்கின்றார். "உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்" எனத் திருமூலர் கூறிய வரிகள் இங்கு தென்படுகின்றன.

சிலேடைப்பாடல்களும்,நகைச்சுவை ப்பாடல்களும் பாடுவதில் சிறப்புப் பெற்ற காளமேகப்புலவர்

"இம்மென்னு முன்னே யெழுநூறு
மெண்ணூறும்
அம்மென்றா லாயிரம்பாட்
டாகாதோ ' சும்மா இருந்தா
லிருந்தே னெழுந்தேனே யாயின்
பெருங்காள மேகம் பிள்ளாய்"

என்று தன் பெருமையை அதிமதுரக்கவிராயிடம் கூறியுள்ளார். அவரது பாடல்களிலே பகுத்தறிவுப் பாடல்கள் பல காணப்படுகின்றன. பாடல்களில் ஒன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தாதிதா தோதீதா தத்தைதா
தோதாதா
தாதிதா தொத்தித்த தாததே-
தாதொத்த
துத்தித்த தாதே துதித்துத்தேத்
டதொத்தீது
தித்தித்த தோதித் திதி"

தோழியின் தூதோ தீதானது. கிளி தூதுபோய்க் கூறாது. பாங்கியின் தூதானது நாட்களைக் கடத்தி வைக்கப்படும் தூதாகும். இறைவனைத் தொழுது தொடர்ந்தால், நல்ல பயனளிக்காமல் வீணாகப் போகும். பூந்தாதையொத்த தேமல் என் மீது விரைவாகப் பாய்ந்து மேலும் அதிகமாகாமல் சுவையான காதலனுடைய பெயரைக் கூறி என்னைக் காப்பாற்றி வைப்பாயாக. என ஓசைச்சுவைமிக்க பாடலிலே சொல்லை ஆட்சி செய்திருக்கும் பாங்கு மெச்சத்தக்கது. அதிலே இக்கால பகுத்தறிவுக் கொள்கையினையும் காணக்கூடியதாக இருக்கின்றது.
தேதுதித்து தொத்து தீதி என இறைவனைத் தொழுது தொடர்ந்தால், நல்ல பயனளிக்காமல் வீணாகப் போகும். எனப் பாடியிருப்பதை மனம் பதிக்கக் கூடியதாக இருக்கின்றது.

எலி வாகனத்திலே வருகின்ற பிள்ளையாரைப் பார்வையுற்ற காளமேகப்புலவர்,
"முப்பான் மழுவும், முராரிநிருச்
சக்கரமும்பார்ப்பான் கதையும்,
பறிபோச்சோ -மாப்பார்
வளமிகுந்த மும்மதத்து வாரணத்தை
ஐயோ!
எலியிழுத்துப் போகிறதென்ன?

என பருத்த உடலும், மிகுந்த வலிமையும், மும்மதமும் பொழிகின்ற களிற்றினைப் போன்ற முகப்பையுமுடைய விநாயகனை எலி கொண்டு போகிறதே ஏன்? இந்தப் பிள்ளையைப் பெற்றதாகச் சொல்லப்படுகின்ற சிவபெருமானின் மழுவாயுதமும், திருமாலின்சக்கரமும், பிரமனுடைய தண்டாயுதமும், எங்கேனும்பறிபோயிற்றோ? என்று நகைச்சுவையாகப் பாடியிருக்கின்றார்.

"அப்ப னிரந்துண்ணி யாத்தாள்
மலைநீலி
ஒப்பரிய மாம னுறிதிருடி
- சப்பைக்கால்
அண்ணன் பெருவயிற னாறுமுகத்
தானுக்கிங்
கெண்ணும் பெருமை இவை"

ஆறுமுகனைப் பார்க்கும் போது காளமேகம் அறிவு ஆறாய் ஒழுகுகிறது. தந்தையோ பிச்சை எடுத்து பிழைப்பவர், தாயோ மலையரசன் மகள், மாமனோ வெண்ணெய் திருடித் தின்பவன், அண்ணனோ சப்பைக்கால் உடையவன், இவையெல்லாமே உனக்குப் பெருமையாக உள்ளன. என புராணங்களின் கதையை ஏளனம் செய்வதாய் இப்பாடலிலே காட்டியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு பெரியார் அவர்களும் கடவுள் பற்றி எண்ணற்ற வினாக்கணைகள் தொடுத்துச் சென்றுள்ளார். விஞ்ஞானிகளும் விண்முட்ட ஆராய்ச்சிகளில் ஈடுபட்டுக் கொண்டே இருக்கின்றனர். இயற்கையின் பலபக்கப் பரிமாணங்களை ஆராய்ச்சிகளில் தெளிவுபடுத்திக் கொண்டுதான் இருக்கின்றனர்.

ஆனால், பகுத்தறிவாளர்கள் எனக் கருதப்படுவோர் பலர் தனியே கடவுள் இல்லை என்று வாதிடுவது மட்டுமே பகுத்தறிவு என்று கருதிக் கொண்டிருப்பது ஆச்சரியத்துக்குரிய விடயமாகின்றது. நம் அறிவுக்குப் புலப்படாத விடயம் எதுவாக இருந்தாலும் அதை அறிந்து கொள்ளத் தேட முற்படுவதும், நடந்து கொண்டிருக்கும் சில விடயங்களை அப்படியே ஏற்றுக் கொள்ளாது அதற்குரிய உண்மை காரணத்தைத் தேடிக் கொள்ள முனைவதும் அவசியமல்லவா? எதிரியாக எம் கண்ணுக்குப் புலப்படுபவன் வேறு பலர் கண்களுக்கு நல்லவனாகத் தெரிவதும், நல்லவன் என்று நாம் ஏற்றுக் கொள்பவன் பலர் கண்களுக்குத் துரோகியாகப் புலப்படுவதும் நோக்கி அதுபற்றி ஏன் என்ற கேள்வியை முன்வைத்து ஆராய்ந்து பார்ப்பதும் ஒரு பகுத்தறிவின் பாற்படுகின்றது. ஒருவன் பார்க்கும் பார்வையில் உண்மைத் தன்மையைத் தேடும்போது சமூகத்திடையே அவன் பற்றிய நோக்கு பலர் பார்வைக்குக் கேள்விக்குறியாகத் தென்படும். ஆனால், மனதுக்கு ஒவ்வாமல், இருக்குமோ இல்லையோ, சரியோ தவறோ என்னும் ஆராய்ச்சியில் ஈடுபடாது, எதுவாகவாவது இருக்கட்டும் எல்லோரும் ஏற்றுக் கொள்கின்றார்களே! அப்படி ஏற்றுக் கொண்டாலேயே பலர் பார்வைக்கு நாம் நல்லவர்களாகத் தெரிவோம். பேரும் புகழும் எமக்குக் கிட்டும் என தப்பான ஒருவிடயத்திற்குத் துணைப்போவது மனிதனாக ஆறறிவு படைத்தமைக்குத் துரோகம் செய்வதாக முடியும். எதிர்காலச் சந்ததியினரையும் தப்பான வழிக்கு இட்டுச் செல்வதாக அமையும். மூடநம்பிக்கைகள் மலிவடைந்து மனிதநேயப்பண்புகளும் மழுங்கடிக்கப்படும்.

எனவே பகுத்தறிவு என்பது தனியே கடவுட்கோட்பாட்டை முறியடிப்பதல்ல. மனிதன்வாழும் பண்புகளின் நடத்தைகளின் தன்மை பற்றியும் ஆராய்வது என்பதில் மனம்பதிக்கவேண்டும்.

திருமதி.கௌரி சிவபாலன்.
ஜேர்மனி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசிஆனந்தனின் சிந்தனைகள்!...

## பாய்ச்சல்:-

மரத்தை வெட்டி வீழ்த்திவிட்டுக் கோடாரியும் கயிறும் விறகு வெட்டிக்குப் பக்கத்தில் மனம்விட்டுப் பேசிக்கொண்டிருந்தன. காட்டுக்குள் நுழைந்த மரங்கொத்திப்பறவை மாறி மாறித் தன் அலகால் கொத்திவிட்டுப் பறந்து போனது.

இந்த மரங்கொத்தியைப் பார்த்தாயா!..நான்கு மரங்களை மாறி மாறித் தன் அலகால் வெட்டியது. ஒரு மரத்தையாவது அதனால் உருப்படியாக வீழ்த்த முடிந்ததா!.. என்று கயிற்றைப் பார்த்துக் கேட்டது கோடரி. மரங்கொத்தியால் அது முடியாது என்றது கயிறு..ஏன் அப்படிச் சொல்கிறாய்!.. கயிறு சொன்னது...

"நாலு மரத்தையும் வெட்டுகிறவன்
ஒரு மரத்தையும் விழத்துவதில்லை"

## முனைப்பு:-

காலைப்பனி கொக்கும் குருவியும் குளிரால் நடுங்கின.. தங்களுக்-குள்ளேயே பேசி அவை ஒரு முடிவுக்கு வந்தன. "இன்று நான் குளத்துக்குப் போவதில்லை வேண்டுமானால் மீன்கள் இங்கே வரட்டும்" என்றது கொக்கு.

"நானும் தோப்புக்குப் போவதில்லை வேண்டுமானால் பழங்கள் இங்கே வரட்டும்" என்றது குருவி.

பொழுது கரைந்தது. பசி வயிற்றைக் கிள்ளியது. நடுப்பகல் தாண்டிய பின்பும் பசியை எப்படித் தாங்கிக்கொள்ள முடியும்.

கொக்கு குளத்துக்குப் போனது. குருவி பழத்துக்குப் போனது. மரத்தில் இருந்த அணில் பாடியது...

"கொக்கைத் தேடிக் குளம் வராது
குருவியைத் தேடிப் பழம் வராது"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்கள் பற்றிய தகவல்கள்...

## 1. பிக்காஸோ

பிக்காஸோ நவீன ஓவியத்தின் தந்தை, ஞானி, மேதை என்றெல்லாம் போற்றப்படுபவர். விமர்சனத்திற்கு அப்பாற்பட்ட உன்னதங்கள் என அவரது ஓவியங்கள் ஓவிய விற்பனர்களாலேயே வியந்து போற்றப்படுகின்றன.சரி அவரது மனைவி அவரது ஓவியங்கள் குறித்து என்ன விமர்சனங்கள் சொல்கிறார் என்று பார்ப்போம். தனது ஓவியங்களில் அவர் வரைந்துள்ளது போன்ற பெண்களை என்கணவர் வீதியில் பார்க்க நேரிட்டால் அவரே மூச்சை அடக்கிக் கீழே விழுந்துவிடுவாராம்..

## 2. தூங்காத மங்கை

தூக்கம் என்றதும் கும்பகர்ணனின் ஞாபகம்தான் வரும். ஆனால் 449 மணி நேரம் தூங்காமல் இருந்து அதிசயத்தில் ஆழ்த்தினாள். அந்தப் பெண்ணின் பெயர் மௌரின்-வெஸ்டர். இவர் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்தவர். ஆடும் நாற்காலியில் அமர்ந்து படுத்து ஏப்ரல் 14 முதல் மே 2ம் தேதிவரை கண் அயராமல் நித்திரை செய்து இந்தச் சாதனை நிகழ்த்தப்பட்டது.

## 3. முதல் பெண்மணிகள்

-உலகில் முதன் முதலாகப் பெண் வீராங்கனைகளைக்கொண்டு படை உருவாக்கியநாடு நியூசிலாந்து.

-உலகிலே முதன்முதலாக கத்தோலிக்கப் பாதிரியாராக (பிஷப்) நியமனம் பெற்றவர். பார்பராசி-ஹரிஸ் என்பவராவர். இவர் அமெரிக்க நாட்டவராவர்.

-முதன் முதலாக விண்வெளியைச் சுற்றிய இந்தியப் பெண்மணி கல்பனா- சாவ்லா என்பராவர்.

திருமதிஇராஜேஸ்வரி சிவராசா.
ஜேர்மனி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'மண்' சஞ்சிகையின் 25வது ஆண்டு நிறைவு
# சிறுவர் இளையோர் போட்டிகள் - 2015

1990ம் ஆண்டு தை மாதம் ஆரம்பிக்கப்பட்ட மண் சஞ்சிகை 2015ம் ஆண்டு தை மாதம் 25வது ஆண்டை நிறைவு செய்கின்றது. மிக்க மகிழ்வு. இந்த வெள்ளி விழாவையொட்டிப் புலம்பெயர்ந்து வாழும் சிறுவர்கள், இளையோர்களிடையே பல போட்டிகளை நடாத்த இருக்கின்றோம். எனவே போட்டிகளில் கலந்துகொண்டு ,பரிசுகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்.......

(A) **6 வயதுவரை: -**

**(01-01-2009 தேதிக்குப் பின் பிறந்தவர்கள்)**

**ஓவியப்போட்டி:-**

அனுப்பி வைக்கப்பட்டிருக்கும் படத்திற்கு அழகாக வர்ணம்தீட்டி எமது முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

(B) **7 - 9 வயதுப்பிரிவு: -**

**(31.12.2008--01.01.2006 உட்பட்ட திகதியில் பிறந்தவர்கள்)**

**(1) ஓவியப்போட்டி:-**

அனுப்பி வைக்கப்பட்டிருக்கும் படத்திற்கு அழகாக வர்ணம் தீட்டி எமது முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

**(2) உறுப்பெழுத்துப் போட்டி:-**

நீங்கள் விரும்பிய தமிழ்ப்பாடல் ஒன்றைப் 10 -1 2 வரிகளுக்குள் அழகுற எழுதி எமது முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

(C) **10 - 12 வயதுப்பிரிவு: -**

**(31.12.2005--01.01.2003 உட்பட்ட திகதியில் பிறந்தவர்கள்)**

**(1) ஓவியப்போட்டி:-**

நீங்கள் விரும்பிய மிருகம், பறவை, மலர் அல்லது உங்களுக்குப் பிடித்த ஏதாவது ஒரு படத்தை வரைந்து வர்ணம் தீட்டி அனுப்புதல் வேண்டும் (DIN A4 தாளில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) உறுப்பெழுத்துப்போட்டி:-
நீங்கள் விரும்பிய ஐந்து திருக்குறள்களையும் அதன் விளக்கத்தையும் அழகாக எழுதி அனுப்புதல் வேண்டும்.

(D) 13 -15 வயதுப்பிரிவு: -
(31.12.2002--01.01.2000 உட்பட்ட திகதியில் பிறந்தவர்கள்)
(1) ஓவியப்போட்டி:-
உங்களுக்குப்பிடித்த அல்லது கற்பனைக்கு எட்டிய ஏதாவது ஒரு படத்தை வரைந்து வர்ணம் தீட்டி அனுப்புதல் வேண்டும். (DIN A4 தாளில்)
(2) கட்டுரைப் போட்டி :-
தமிழ்மொழி, நான் விரும்பும் தொழில், திருக்குறள், தாய்த்திருநாடு இத்தலைப்புக்களில் ஒன்றைத் தெரிவுசெய்து DIN A4 தாளில் இரு பக்கத்தில் அழகாக எழுதி அனுப்புதல் வேண்டும்.
(3) கவிதைப்போட்டி:-
நீங்கள் விரும்பிய தலைப்பில் 10 -15 வரிகளுக்குஅமைவாக எழுதி அனுப்புதல் வேண்டும்.

(E) 16 - 18 வயதுப்பிரிவு.-
(31.12.1999--01.01.1997 உட்பட்ட திகதியில் பிறந்தவர்கள்)
(1) ஓவியப்போட்டி.-
உங்களுக்குப்பிடித்த அல்லது உங்கள் கற்பனைக்கு எட்டிய ஏதாவது ஒரு படத்தை வரைந்து வர்ணம் தீட்டி அனுப்புதல் வேண்டும். (DIN A4 தாளில்)
(2) கட்டுரைப்போட்டி:-
கணனியுகம், புலம்பெயர் தமிழ் மாணவர்கள், திருக்குறளின் சிறப்பு, தனிநாயகம் அடிகளார், தாய்நாட்டின் துயர் துடைப்போம் இத்தலைப்புக்களில் ஏதாவது ஒன்றைத் தெரிவுசெய்து DIN A4 தாளில் இரண்டு பக்கங்களில் எழுதி ஆனுப்புதல் வேண்டும்.
(3) கவிதைப்போட்டி:-
நீங்கள் விரும்பிய தலைப்பில் 15 - 20 வரிகளுக்கு அமைவாக எழுதி அனுப்புதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(F) 19 - 21 வயதுப்பிரிவு: -

(31.12.1996 -- 01.01.1994 உட்பட்ட திகதியில் பிறந்தவர்கள்)

(1) ஓவியப்போட்டி.-

உங்களுக்குப்பிடித்த அல்லது உங்கள் கற்பனைக்கு எட்டிய ஏதாவது ஒரு படத்தை வரைந்து வர்ணம் தீட்டி அனுப்புதல் வேண்டும். (DIN A4 தாளில்)

(2) கட்டுரைப்போட்டி.-

கணனியுகம், தனிநாயகம் அடிகளார், திருக்குறளின்சிறப்பு, புலம்பெயர் தமிழ் மாணவர்களும் தாயக மாணவர்களும், பெற்றோரும் இளவயதினரும் ஏதாவது ஒரு தலைப்பில் DIN A4 தாளில் மூன்று பக்கங்களில் எழுதி அனுப்புதல் வேண்டும்.

(3) கவிதைப்போட்டி.-

நீங்கள் விரும்பிய தலைப்பில் 15 - 20 வரிகளுக்கு அமைவாக எழுதி அனுப்புதல் வேண்டும்.

சிறுவர், இளையோருக்கான பொதுவிதிகள்:-

- போட்டிகள் முற்றிலும் இலவசமானது.
- வயது எல்லை(31.12.2014ல்) சரியாகக் கடைப்பிடித்தல் வேண்டும்.
- ஓவியப்போட்டியில் பங்குபற்றுபவர்கள் ஒருவர் ஒரு படத்தை மட்டும் வரைந்து வர்ணம் தீட்டி ஆனுப்புதல் வேண்டும்.
- அனைத்துப் பிரிவு ஓவியங்களும் DIN A4 தாளில் மட்டும் வரையப்படுதல் வேண்டும்.
- எழுத்துப்போட்டிகளில் கலந்துகொள்பவர்கள் அனைவரும் வெள்ளைத்தாளில் கறுப்பு மைப்பேனாவினால் எழுதுதல் வேண்டும். (சிறப்புமலரில் அப்படியே பதிவாகுவதற்கு)
- கோடுகள் போடப்பட்ட தாள்களில் எழுதுதல் தவிர்க்கப்பட்டுள்ளது.
- சிறுவர்கள், இளையோரின் எழுத்தாற்றல்களை மேம்படுத்துவதற்காக கவிதை, கட்டுரை, உறுப்பெழுத்துப்போட்டி அனைத்தும் கையால் எழுதுதல் வேண்டும். கணனியில் பதிவுசெய்து அனுப்புபவர்களின் ஆக்கங்கள் தவிர்க்கப்படும்.
- இன, மத, நிற, மொழி, நாடு, கட்சி, இயக்கம், அரசியல் வேறுபாடுகளைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.
- நடுவர்களின் தீர்ப்பே இறுதியானதும் முடிவானதுமாகும். வெற்றியாளர்களுக்குச் சிறந்த பரிசுகள் வழங்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'மண்'சஞ்சிகையின் 25வது ஆண்டு நிறைவு வாசகர் போட்டிகள் - 2015

1990ம் ஆண்டு தை மாதம் ஆரம்பிக்கப்பட்ட மண் சஞ்சிகை 2015 தை மாதம் 25வது ஆண்டுகளை நிறைவுசெய்து வெள்ளிவிழாவைக் கொண்டாடவுள்ளது. இந்த வெள்ளிவிழாவையொட்டி புலம்பெயர்வாழ் வாசகர்கள், எழுத்தாளர்கள், ஆக்கதாரர்கள், படைப்பாளிகளிடையே கவிதை, கட்டுரை, சிறுகதைப் போட்டிகளை நடாத்தவுள்ளோம். ஆர்வமுள்ளவர்கள் பங்குகொண்டு பரிசுகளை வென்றிடுங்கள்...

1. **கவிதைப்போட்டி:-**
   நீங்கள் விரும்பிய தலைப்பில் 30 - 40 வரிகளுக்குள் அமைதல் வேண்டும்.

2. **சிறுகதைப்போட்டி:-**
   விரும்பிய தலைப்பில் எழுதலாம் DIN A4 தாளில் நான்கு பக்கங்களுக்குள் கணனியில் பதிவுசெய்து அனுப்புதல் வேண்டும் (எழுத்துருபு - பாமினி எழுத்து அளவு 14)

3. **கட்டுரைப்போட்டி:-**
   (1) தமிழர்விடுதலைப்போராட்டம் (2) தமிழ்த்தூதர் தனிநாயகம் அடிகளார்
   (3) திருக்குறளும் வாழ்வியலும் (4) புலம்பெயர் வாழ்வியல்
   (5) கணனி உலகம் (6) தமிழ்ப்பெண்களின் இன்றையநிலை
   (7) ஊடகங்களின்பங்கு (8) மண் சஞ்சிகையின் 25 ஆண்டுகள்

ஏதாவது ஒரு தலைப்பைத் தெரிவுசெய்து DIN A4 தாளில் நான்கு பக்கங்களுக்குள் கணனியில் பதிவுசெய்து அனுப்புதல் வேண்டும். (எழுத்துருபு- பாமினி எழுத்து அளவு 14)

பொதுவிதிகள்: -

வயதுவேறுபாடு இல்லை. போட்டிகள் இலவசமானது, போட்டிகளுக்கு எழதும் தாள்களில் உங்கள் பெயர், முகவரிகளைத் தவிர்த்துக்கொள்ளல் வேண்டும். இன, மத, நிற, மொழி, நாடு, இயக்கம், அரசியல் வேறுபாடுகளை தவிர்த்துக்கொள்ளல் வேண்டும். முடிவுத்திகதி: 31.12.2014

தொடர்பு முகவரி:- V.Sivarajah, AmWindhövel 18a, 47249 Duisburg Germany. E.mail v.sivarajah@arcor.de



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நலமாய்வாழ!....நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.....

-மேழிக்குமரன்-

## வெற்றிலையின் மருத்துவ குணங்கள்

மனிதன் தோன்றிய காலத்தில் இருந்தே வெற்றிலையானது பயன்பாட்டில் இருந்து வருகிறது. பல ஆயிரம் ஆண்டுகளாக பயன்படுத்தப்படும் தாவரங்களில் வெற்றிலையும் ஒன்றாகும். வெற்றிலையில் கால்சியம், இரும்புச்சத்து ஆகியன அதிகம் உள்ளது. இது தவிர வெற்றிலையைப் பயன்படுத்தி பல நோய்களையும் குணப்படுத்தலாம்.

இலைகளும், வேர்களும் மருத்துவ பயன் உடையவை. இலைகளில் காணப்படும் எளிதில் ஆவியாகும் எண்ணெய் மூச்சுக்குழல் நோய்களுக்கு மருந்தாகிறது. இலையின் சாறு ஜீரணத்திற்கு உதவுகிறது. வேர்பகுதி பெண்களின் மலட்டுத்தன்மையை போக்குகிறது.

அரை டம்ளர் தேங்காய் எண்ணெயில் 5 வெற்றிலையை போட்டு கொதிக்க விடவும். இலை நன்கு சிவந்ததும் வடிகட்டி போத்தலில் அடைத்து வைத்துக் கொண்டு சொறி,சிரங்கு, படைக்குத் தடவி வந்தால் நல்ல குணம் கிடைக்கும்.வெற்றிலையைக் கசக்கிக் சாறு எடுத்து அந்த சாற்றில் சிறிதளவு கற்பூரத்தைச் சேர்த்துக் குழைத்து வலியுள்ள இடத்தில் தடவினால் தலை வலி உடனே குணமாகும்.இரண்டு வெற்றிலையை எடுத்து அதில் ஒன்பது மிளகை மடித்து வாயில் போட்டு நன்றாக மென்று விழுங்கி தேங்காய் துண்டுகள் சிலவற்றினையும் மென்று தின்றால் தேள் விஷம் உடனே முறியும்.

சர்க்கரை வியாதி உள்ளவர்கள் இரண்டு வெற்றிலையுடன் வேப்பிலை ஒரு கைப் பிடியளவும் அறுகம்புல் ஒரு கைப்பிடியளவும் ஒரு சட்டியில் போட்டு 500 மிலி தண்ணீர் விட்டு நன்றாக கொதிக்க விடவும். தண்ணீரின் அளவு 150 மி.லி ஆக குறையும் வரை கொதிக்க விட்டு, பின்பு வடிகட்டி ஆற வைத்து வேளைக்கு 50 மி.லி வீதம் மூன்று வேளை உணவுக்கு முன்பு சாப்பிடவும்.

அல்சர் உள்ளவர்கள் இரண்டு வெற்றிலையுடன் அத்தி இலை 1 கைப்பிடி வேப்பிலை 5 ஆகியவற்றை மேலே உள்ள முறைப்படி கசாயம் தயாரித்து மூன்று வேளை அருந்தி வரவும். முற்றின வெற்றிலையைச் சாறு பிழிந்து அதில் இரண்டு அவுன்ஸ் சாற்றுடன் 3 மிளகு அதே அளவு சுக்கு ஆகியவற்றை ஒரு தேக்கரண்டி தேனுடன் கொடுத்தால் இரைப்பு மூச்சுத் திணறல் குணமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன அழுத்தம் போக்கும் ஏலக்காய்

சமையலின் போது வாசனைக்காக பயன்படுத்தப்படும் ஏலக்காய் வாசனைப்பொருட்களின் அரசி என்று அழைக்கப்படுகிறது. அசைவ உணவில் இதைச் சேர்த்தால் அதன் ருசியே தனிதான்! செரிமான சக்தியைக் கூட்டி, பசியைத் தூண்டுவதில் ஏலக்காய் முக்கிய பங்கு வகிக்கிறது. வாசனைப் பொருளாக பயன்படுத்தப்படும் ஏலக்காயில் மருத்துவ குணம் நிறைந்துள்ளது. இதில் கனியும் விதைகளும் மருத்துவப் பயன் கொண்டவை.

நறுமணம் கொண்ட விதைகள் வயிற்று வலியினை சரிசெய்கின்றன. ஜீரணத்தை தூண்டுபவை. உடலின் வெப்பத்தை கூட்டி ஜீரணத்தினைத் அதிகப்படுத்தும். இது தசை சுரிப்பு கோளாறுகளுக்கு எதிரானது.

## வயிறு உப்புசம் நீக்கும்

ஆஸ்துமா, மூச்சுக்குழல்அழற்சி, சிறுநீரகத்தின் கல், நரம்புத் தளர்ச்சி, மற்றும் பலவீனம் நீக்கப் பயன்படுத்தப்படுகிறது. சிறுநீர்ப் போக்கு கட்டுப்பாடின்மையினைப் போக்கவும் வலுவேற்றியாகவும் உதவுகிறது. வாய் துர்நாற்றம் போக்கவும் ஏலக்காய் பயன்படுத்தப்படுகின்றது. பாலுணர்வு தூ ண்டும் பொருளாகவும் உள்ளது.

## ஏலக்காய் டீ

மன அழுத்தப் பிரச்சினையால் பாதிக்கப்பட்டவர்கள், 'ஏலக்காய் டீ' குடித்தால் இயல்பு நிலைக்கு வருவார்கள். டீத் தூள் குறைவாகவும், ஏலக்காய் அதிகமாகவும் சேர்த்து (ஒரு கப் டீக்கு இரண்டு ஏலக்காய் போதுமானது!) டீ தயாரிக்கும்போது வெளிவரும் இனிமையான நறுமணத்தை நுகர்வதாலும், அந்த டீயைக் குடிப்பதால் ஏற்படும் புத்துணர்வை அனுபவிப்பதாலும் மன அழுத்தம் சீக்கிரமே குறையும்.

நாவறட்சி, வாயில் உமிழ்நீர் ஊறுதல், வெயிலில் அதிகம் வியர்ப்பதால் ஏற்படும் தலைவலி, வாந்தி, குமட்டல், நீர்ச்சுருக்கு, மார்புச்சளி, செரிமானக் கோளாறு என பல பிரச்சினைகளிலிருந்து, ஏலக்காயை சும்மா வாயில் போட்டு மெல்லுவதாலேயே நிவாரணம் பெறமுடியும். எனினும் இதை அதிகமாக, அடிக்கடி சேர்த்துக்கொள்வது நல்லதல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாயுத்தொல்லை அகலும்

வாயுத் தொல்லையால் அவதிபடுகிறவர்கள் , கூச்சமின்றி நாடவேண்டிய மருந்து ஏலக்காய். ஏலக்காயை நன்கு காயவைத்து பொடியாக அரைத்துக்கொள்ள வேண்டும். இந்தப் பொடியில் அரை டீஸ்பூன் எடுத்து, அரை டம்ளர் தண்ணீரில் கொதிக்கவிட வேண்டும். உணவு உட்கொள்வதற்கு முன்பாக, இந்த ஏலக்காய் தண்ணீரைக் குடித்தால் வாயுத்தொல்லை எப்போதும் இருக்காது.

## குழந்தைகளுக்கு அருமருந்து

குழந்தைகளுக்கு வாந்தி பிரச்சினை இருந்தால் பயப்படாமல் ஏலக்காயை மருந்தாகத் தரலாம். இரண்டு ஏலக்காய்களை பொடியாக்கி, அந்தப்பொடியை தேனில் குழைத்து குழந்தையின் நாக்கில் மூன்று வேளை தடவினால், வாந்தி உடனே நிற்கும். ஜலதோஷத்தால் பாதிக்கப்பட்டு மூக்கடைப்பில் அவதிப்படும் குழந்தைகளுக்கு ஏலக்காய் நிவாரணம் தருகிறது. நான்கைந்து ஏலக்காய்களை நெருப்பில் போட்டு, அந்தப் புகையை சுவாசித்தால், மூக்கடைப்பு உடனே திறக்கும்.

---

## தகவல்கள் !.

- உலகம்பூராவும் தற்போது சுமார் 11 மில்லியன் எயிட்ஸ் நோயாளிகள் காணப்படுகிறார்கள் என உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது.

- மேற்கு ஐரோப்பிய நாடுகளை அச்சுறுத்தி உயர்ப்பலி எடுத்துவரும் எபோலா தொற்றுநோயால் இறந்தவர்களின் எண்ணிக்கை 5.200 பேரைத் தாண்டியுள்ளது. நோய்வாய்ப்பட்டவர்களின் எண்ணிக்கை 11.000 பேர்வரை என அறிவிக்கப்பட்டுள்ளது. ஐரோப்பிய நாடுகளிலும் பிரான்ஸ், பெல்ஜியம், பிரித்தானியா நாடுகளிலும் சுமார் 100 பேர்வரை இந்த நோயினால் பாதிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவந்துள்ளது.

- உலகம் முழவதும் தற்போது சுமார் 805 மில்லியன் மக்கள் பசிபட்டினியோடு வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள் எனவும் எந்தியோப்பியா சோமாலியா, சூடான், மத்திய ஆபிரிக்கக்குடியரசு போன்ற நாடுகளின் தினமும் ஆயிரக்கணக்கானோர் இறக்கிறார்கள் என உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப் போட்டி -143

## (கார்த்திகை-மார்கழி- 2014)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | 32 | 33 | 34 | 35 |
| 36 | 37 | 38 | 39 | 40 | 41 | 42 |
| 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 |

இ-வ:-

01-04 அகிலம் வாழ் கத்தோலிக்க மக்களின் பெருநாள்.

12-13 மனித உறுப்புக்களில் கடினமான உறுப்பு.

17-20 பெண்களுக்கு அழகு சேர்ப்பது

29-32 இலக்கியத்தில் ஒருவர்.

43-47 சின்னப்பெட்டி. அது ஆபத்தான பெட்டி.

வ-இ:-

07-04 நல்வழி போதித்த பகவான்.

12-10 நாம் அணியும் ஆடைவகைகளில் ஒன்று.

26-22 மூத்த மொழிகளில் ஒன்று.

40-37 சிலர் இதைக் காசுகொடுத்தும் வேண்டுகிறார்களாம் (கு)

49-47 தமிழர்களின் பாரம்பரிய கலைநடனங்களில் ஒன்று.

கீ-மே:-

17-10 பறவைகளின் வாழ்விடம்.

23-09 அழகான மலர்கள் மலர்வதற்குமுன் ஒரு நிலை.

43-22 மிகப்பெரிய பறவை.

48-27 தமிழர்களும் சிங்களவர்களும் வாழும் தமிழ்மாவட்டம்

49-35 உயர...உயரப் பறந்தாலும் இது இந்த நிறம்தான்.

மே-கீ:-

01-22 ஔவையார் அருளிய நூல்களில் ஒன்று.

07-35 இவையும் மனிதர்களுக்கு நல்வழி காட்டுபவையே

17-24 இதைக்குடித்தாலும் குளித்துக்குடி என்பார்கள்.

33-47 முன்னொருகாலத்தில் ஆண்களின் அணிகலன். இப்போது பெண்களின் அணிகலன்.

முடிவுதிகதி: 31.12.2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப் போட்டி முடிவு-142
## (புரட்டாதி--ஐப்பசி 2014)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| அ | ன் | னை | தி | ரே | சா | லை |
| று | ங் | கு | டா | வ | மொ | ழி |
| ரா | ம் | ட | ட் | தி | ம | கோ |
| த | ந் | தி | ர | ம் | ல | க் |
| பு | க | ழ் | பு | ப் | ர் | தீ |
| ர | ண் | பா | ப் | அ | ல | ர் |
| ம் | டி | ண் | உ | ப | பா | வு |

போட்டியில் கலந்துகொண்டவர்களும். பரிசு பெறுபவரும்.

திருமதி.ஜெயா.நடேசன் - Havixbeck
திருமதி.கண்மணி.சின்னத்தம்பி - Frankfurt
திருமதி.கலைவாணி.ஏகானந்தராசா - Weeze
திருமதி.சுலோசனா.புவனேந்திரன் - Duisburg
திருமதி.சக்தி.சிறினிசங்கர் - Mönchengladbach
திருமதி.புஸ்பா.அருமைத்தரை - Weisloch
திரு.தி.தேவானந்தராசா - Möchengladbach

போட்டியில் கலந்துகொண்ட அனைவருக்கும் நன்றிகளும் வாழ்த்துக்களும்...இவர்களில் பரிசுபெறும் அதிஸ்டசாலி..
திருமதி கண்மணி சின்னத்தம்பி - Frankfurt

## கண்!.

கண்ணால் தெரியாத கடவுளுக்கு உதவுவதைவிட கண்ணால் தெரியும் ஏழைகளுக்கும், இலயாதவர்க்கும் உதவுவதே மனிதனின் முதல்கடமையாகும்!.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரதம்!...

(சென்ற இதழ் தொடர்ச்சி)

திருமதிசாந்தினி துரையரங்கன் - ஜேர்மனி.

8.) மண்டியடவு - 4
இவ்வடவு முழுமண்டி நிலையில் இருந்து செய்யப்படும்.
இதன் சொற்கட்டு- தாங்கிடு தத்த தின்ன
இதில் நான்கு விதமான அடவுகள் உள்ளன.
சதுஸ்ர ஜாதி ரூபக தாளத்தில் இவ்வடவு அமைந்துள்ளது.

| அடவு | முத்திரை |
|---|---|
| 1ம், 3ம் அடவுகள் | திரிப்பதாகம் |
| 2வது அடவு | திரிப்பதாகம், கடகாமுகம், அலபத்மம், பதாகம் |
| 4வது அடவு | திரிப்பதாகம், கடகாமுகம், அலபத்மம் |

சொற்கட்டும் தாளமும்,

0
தாங்கிடு தத், த, / தின், ன, தாங்கிடு தத், த, தின், ன, //

9. தித் தித் தெய் அடவு - 2

இரண்டு விதமான அடவுகள் உள்ளன.
தித் தித் தெய் என்பது இதன் சொற்கட்டு ஆகும்.
ஆதி தாளத்தில் இவ்வடவு அமைந்துள்ளது.
இரண்டு அடவுகளிலும் கடகாமுகம், அலபத்மம் எனும்
முத்திரைகளே பயன்படுத்தப்படுகின்றன.

சொற்கட்டும் தாளமும்,

1 0 0
தித்,, தித்,. தெய்,,, / தித்,, தித்,,/ தெய்,,,,//

10. தித் தெய்ந்த தா தெய் அடவு - 3
இதில் மூன்று வகையான அடவுகள் உண்டு.
சொற்கட்டு- தித் தெய்ந்த தாதெய்.
இவ்வடவு ஆதி தாளத்தில் அமைந்துள்ளது.
பாய்ச்சல் அடவு என்றும் இதனை அழைப்பர்.

| அடவு | முத்திரை |
|---|---|
| 1ம், 2ம் அடவுகள் | கடகாமுகம், அலபத்மம். |
| 3வது அடவு | சிகரம், அர்த்தசந்திரன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்கட்டும் தாளமும்,

I O

தித், தெய்ந்த தாதெய், தித், தெய்ந்த தாதெய்,/ தித்,தெய்ந்த தாதெய்,∴

O

தித்,தெய்ந்த தாதெய்,∴∴

11.தெய் தெய் தத்தா அடவு -3

மூன்று வகையான அடவுகள் உண்டு.

தெய் தெய் தத்தா தித் தெய் தத்தா என்பது இதன் சொற்கட்டு.

இவ்வடவு ஆதிதாளம் (திஸ்ரநடையில்) அமைந்துள்ளது.

| அடவு | முத்திரை |
|---|---|
| 1வது, 2வது அடவுகள் | கடகாமுகம், அலபத்மம் |
| 3வது அடவு | திரிப்பதாகம் |

சொற்கட்டும் தாளமும்,

ஆதி தாளம் இரட்டைக்களை திஸ்ரநடை

1 0 0

தெய்,,தெய்,தத்,,தாதித்,,தெய்,தத்,,தா/தெய்,,,தெய்,தத்,,தா/தித்,,தெய், தத்,,தா//

12. சறுக்கல் அடவு -1

இதில் ஒரு அடவு மட்டும் உண்டு.

கால்களை சறுக்கி ஆடுவதால் சறுக்கல் அடவு என அழைக்கப்படுகின்றது.

சொற்கட்டு- தாங்கிடு தத்த தின்ன.

இது சதுஸ்ர ஜாதி ரூபக தாளத்தில் அமைந்துள்ளது.

சிகரம், அர்த்தசந்திரன் எனும் முத்திரைகள் பயன்படுத்தப்படுகின்றன.

சொற்கட்டும் தாளமும்,

0 1

தாங்கிடு தத், த,/ தின்,ன, தாங்கிடு தத், த, தின்,ன,//

13. உட்சங்க அடவு - 1

இதில் ஒரு அடவு மட்டும் உண்டு

உத்சங்க முத்திரை பயன்படுத்திச் செய்யப்படும்.

இதன் சொற்கட்டு - தகதிமி

ஆதி தாளத்தில் அமைந்துள்ளது.

சொற்கட்டும் தாளமும்,

1 0 0

த,, க,, தி,, மி,, / த,, க,, / தி,, மி,, //

அடுத்த இதளில் தொடரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பா வருவாரா!...

(சிறுகதை)

மழைபெய்து ஓய்ந்து விட்டது இருந்தாலும் தூறல் நின்றபாடில்லை. பாரு அந்த ஈரமான விறகை வைத்து ஊதி நெருப்பை மூட்டினாள் அது புகைத்ததே தவிர எரிந்த பாடில்லை. ஒரு மாதிரி ஊதி ஊதி எரியப்பண்ணிவிட்டாள். உலையில் அரிசியைப் போட்டுவிட்டு அடுக்களை சுவரில் சாய்ந்திருந்தாள். மெதுவாக கண் இருட்டிக்கொண்டு வந்தது. அவள் காலையில் குடித்த ஒரு தேத்தண்ணீர் தான்.ஆதனால் என்னவோ தெரியவில்லை , பிள்ளைகளும் இனி வந்துவிடுவார்கள், கறி வைக்கவேண்டும் பசியோடு வருவார்கள் என்றதும் உடனே எழுப்பி சமையலைக் கவனித்தாள். சமையல் முடிய வெளியே எட்டிப்பார்த்தாள் பிள்ளைகள் இன்னும் வரவில்லை. அந்த கொட்டில் வீட்டில் ஒரு பக்கம் மழையால் ஒழுகிக்கொண்டிருந்தது .அதில் ஒரு சட்டியை வைத்தாள். ஒழுகும் தண்ணீர் அந்த சட்டிக்குள் டொக்,டொக் என விழுந்தது வீடும் வேயவேண்டும் இப்போ என்ன செய்வது. முன்பு வெய்யில் எறிக்கும்போது காசில்லை. இப்ப வேலை ஒன்றுக்குப்போவதால் காசு கிடைக்கின்றது. பக்கத்து அக்காவின் சிபாரிசினால் பாருவுக்கு வேலை கிடைத்தது. ஒரு வயது போன பெண்ணை பராமரிக்கும் வேலையில் இருக்கின்றாள். காலையில் சென்று அவரை குளிக்க வார்த்து, சமையல் செய்து , சாப்பாடு கொடுத்து அவரைத் தூங்கவைத்து விட்டு வருவாள். பிறகு அவரின் உறவினர் அவரைக் கவனிப்பார்கள். அதற்கு அவளுக்குப் பணம் கிடைக்கும். இந்த வருவாயில் அவளும் அவளுடைய இரண்டு பிள்ளைகளும் சீவிக்க முடிந்தது. பிள்ளைகளும் படிக்கின்றார்கள்.

பாரு ஒரு நடுத்தர குடும்பத்தில் பிறந்தவள். அவள் படிக்கும்போது பரதனும் அவளுடைய வகுப்பில் படித்தான். இருவரும் காதலித்தார்கள். பரதன் படித்துவிட்டு, ஒரு பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியராக கடமையாற்றினான். அதனால் பாருவின் பெற்றாரும் பரதன், பாருவின் திருமணத்தை செய்துவைத்தனர். பரதன் பாரு இல்லறம் நல்லறமாக சிறக்க ஈருடல் ஓருயிராக வாழ்ந்தார்கள். இரண்டு ஆண் வாரிசுகளைப்பெற்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெயன், லவன்.இப்படி இருக்கையில் வன்னியில் ஏற்பட்ட பேரிழப்பால் பிரிந்து போனார்கள். அம்மாவுடன் இருபிள்ளைகள். அப்பாவைக் காணவில்லை, பாருவுக்கு இன்றுவரை கணவரைப் பற்றியே தெரியாது பிள்ளைகள் கேட்பார்கள் அப்பா எப்ப அம்மா வருவார். ஒரு நாள் வருவார் என்று சொல்லுவாள். இப்படியே நான்கு வருடங்களாயிற்று. இவர்களும் இடம்பெயர்வில் இங்கு வந்து தங்கியுள்ளனர். ஏதோ பாருவுக்கு பக்கத்திலிருந்த அக்கா தான் இந்த வேலையை செய்யச்சொன்னா. பொன்னம்மாக்காவின் பிள்ளை வெளிநாட்டில நல்ல சம்பளம் தருவினம் பாரு உனக்கு வாழ்க்கைச் செலவுக்குவேணும்தானே என்று சொல்லி ஒப்புக்கொள்ள வைத்தாள். ஆரம்பத்தில் பாருவுக்கு இது அருவருப்பான வேலையாக இருந்தது இருந்தாலும் வீட்டுச்சுமை, பிள்ளைகள் நிலமை கருதி ஒப்புக்கொண்டாள். வந்து தாயைப் பார்ப்பது போல நினைத்து பார்த்தாள் . இப்படி இருக்கையில் ,பொன்னம்மாக்காவின் மகன் பாரிஸில் இருந்து தன் தாயை பார்க்க வந்தார். தனது தாயை பாரு நன்றாக பார்ப்பதை பார்த்து மனம் மகிழ்ந்து அவளுடைய பிள்ளைகளுக்குப் படிக்க உதவி செய்வதாக கூறினார்.

அதன்படியே அவர்கள் படிப்பதற்கு உதவி செய்கின்றார். குடிமனை அவ்வளவு வசதியில்லை அதை அவரிடம் கேட்க முடியாதே ஆகையால் இருப்பதை கொண்டு வாழத்தானே வேண்டும் என நினைத்தாள். இந்த ஒழக்கை நிறுத்த கெதியில் வேயவேண்டும் என நினைத்துக்கொண்டு, வீட்டை ஒழுங்குபடுத்தவும், பிள்ளைகள் வரவும் சரியாக இருந்தது. பிள்ளைகள் வந்து கை கால்கள் கழுவி விட்டு வர அவர்களுக்கு முத்தம் கொடுத்து அணைத்துக்கொண்டு சாப்பிடவாங்கோ என்று சொல்ல ,அவர்கள் புத்தகப்பையை வைத்துவிட்டு வந்து அம்மா குழைத்து கொடுத்த உணவை கையில் வாங்கி , உண்டனர். சாப்பிட்டு முடித்த பின் கைகழுவி விட்டு, அம்மா சொன்னா வீட்டுப்பாடத்தை செய்யுங்கோ பிறகு இரவில் செய்ய கஸ்டமாக இருக்கும் , லாம்பு வெளிச்சம் காணாது என்று சொல்ல அவர்கள் வீட்டுப்பாடம் செய்தார்கள். மண்ணெண்ணெய் வாங்க வேண்டும் நான் போய் வீடு வேய கிடுகும் பார்த்து விட்டு மண்ணெண்ணெய் வாங்கிக்கொண்டு வருகிறேன் என்று சொல்லிவிட்டுச்சென்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியில் சென்ற பாரு கிடுகும் வாங்குவதற்கு கதைத்துவிட்டு, வேய்பவரிடம் சென்று அண்ணா வீடு சரியாக ஒழுகுது என்று சொல்ல அவர் மழை விட்டால் வந்து செய்கிறோம் என்று சொல்ல பாரு அதற்கு முற்பணமும் கொடுத்துவிட்டு வந்தாள். வரும் போது கொஞ்சம் நிம்மதியுடன் திரும்பி வந்தாள். மழை நின்றால் வீட்டை வேயலாம் கடவுளே மழை இல்லாது காப்பாற்றிப்போடு என்று பிரார்த்தித்துக்கொண்டாள். வீட்டிற்கு வந்தாள். பிள்ளைகள் இரண்டும் காகிதக்கப்பல் செய்து விட்டு விளையாடிக்கொண்டிருந்தார்கள்.. மழைத்தூறலும் நின்றபாடில்லை. அவர்களை உள்ளே அழைத்து மழையில் நனையவேண்டாம் என்று சொல்லி விட்டு ,மண்ணெண்ணையை லாம்பில் விட்டு கொழுத்திவிட்டு ஈர உடையை மாற்றிக்கொண்டு பிள்ளைகளுக்கு தேநீர் போட்டு கொடுத்துவிட்டு, அன்றைய தினப்பத்திரிகையைப் பார்த்தாள், ஏதாவது தமிழர்களுக்கு தடைக்கல் விலகும் சாத்தியம் இருக்கின்றதா என்று , ஆனால் அப்படி ஒன்றும் அதில் இல்லை.

இப்படியே இரண்டு நாள் தொடர்ந்து மழை இடையில் சிறிது விட்டது . சூரியன் வரவும் மனதுக்கு மகிழ்வை தந்தது. அந்த மழை விட்ட இடைவேளியில் ,வீடும் வேயப்பட்டது. அப்பாடா என்றிருந்தது பாருவுக்கு இப்ப என்றாலும் . ஒழுக்கு இல்லாமல் நிம்மதியாக இருக்கலாம் என்று நிம்மதியடைந்தாள். அடுத்த நாள் வேலைக்கு போனபோது , அந்த பெண்ணிடம் நன்றி கூறினாள், உங்களுடைய பிள்ளையின் உதவியால் தான் நானும் எனது பிள்ளைகளும் உயிர் வாழ்கிறோம். அவருடைய உதவியால் எனது பிள்ளைகள் படிக்கின்றார்கள். அவருக்கு நான் நன்றி கூறினால் மட்டும் போதாது. என்று சொல்லும்போது அந்த அம்மாவின் கண்களில் கண்ணீர் பெருகியது. அது ஆனந்தக் கண்ணீரா! ஆதங்கக் கண்ணீரா! ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன் மகனை சான்றோன் எனக் கேட்டதாய். இப்படி ஒரு பிள்ளையை பெற்றதற்கு கடவுளுக்கு நன்றி செலுத்திய கண்ணீரா!..
ஒரு குடும்பத்தை ஒரு விதத்தில் வாழவைத்த கருணையுள்ள மனிதர். தனது தாயைப் பார்ப்பதும், அதன் பலனாக அவர்களும் உதவி பெறுவதும் ஒரு வகையில் கொடுத்து வாங்குவது போலத்தான். எதுவாக இருந்தாலும், பாரு குடும்பம் கொஞ்சமாவது மகிழ்வுடன் வாழ இவரின் உதவியும் கை கொடுக்கின்றது என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராட்டுக்குரியது. இப்படி
கதியற்ற குடும்பத்திற்கு
கைகொடுத்தால் இயலுமானவரை
இதயமும் மகிழும். இறைவனும்
மகிழ்வான் இப்படி முடிந்தவரை
ஏதாவது உதவி செய்யலாம்.
போன அப்பா திரும்பி வருவார்
என்ற நம்பிக்கையில் பாருவும்
பிள்ளைகளும், காத்திருக்கின்றனர்.
இன்னும் எவ்வளவு காலமோ
! அப்பா வருவார ! இல்லையா!
உள்ளம் உடைந்துவிட்டாலும்
,உறவுகள் தொலைந்துவிட்டாலும்,
பிள்ளைகளின் எதிர்காலம்
வாழத்தான் வேண்டும்

திருமதி கெங்கா ஸ்ரான்லி
ஜேர்மனி.

## என்றும் யேசுபாலா!...

மனுக்குலத்தின் பாவத்திற்காய
மறுவுருவெடுத்து மனிதனாய் எம் மைந்தன்
அமைதி என்னும் ஆசீரை அகிலத்தில் பொழிய
அவனியில் அவதரித்தார் எம் பாலக யேசு
ஒளிர்ந்தார் மிளிர்ந்தார் எம் பாலன்
வைகறைப் பொழுதின் வசந்தம் போல
வைக்கோல் புல்லினை மெத்தையாக்கி
அமைதியில் தூங்குகின்றார் எம் பாலகன்
மழைக்காலத் தூறல்கள் புற்களின் பனித்துளிகள்
மலைகளும் குன்றுகளும் தாழ்பணிந்து வணங்கின
ஆறுகள் அலைமோதி ஆரவாரமிட்டன
ஆதவனுக்கு அறைகூவல் விட்டபடி
ஒளியின் மைந்தனாய் பிறந்தார் யேசு!...

திருமதிஜெயா நடேசன்.
ஜேர்மனி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்துமஸ்!....



சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு யூதோயாவில் "பெத்தலேகம்" என்ற இடத்தில் ஒரு மாட்டுத்தொழுவத்தில் யேசுநாதர் பிறந்தார் என்பது வரலாறாகும். முதன்முதலில் யேசுவைக் காணச்சென்றவர்கள் ஆடு மேய்ப்பவர்கள்தான். அவர்களுக்குத் தேவதூதர் இந்தச்செய்தியை தெரிவித்தார். அவர்கள் குழந்தை யேசுவைத் தரிசித்து, ஆராதித்து பரிசுகளை வழங்கினார்கள்.

"மெசியா" மக்களை மீட்கவே யேசு பிறந்தார் என்பது யூதமறை நம்பிக்கை. கீழ்த்திசை ஞானிகளும், தாங்கள் கண்ட வால் நட்சத்திரம் வழிகாட்ட யேசு பிறந்த பெத்தலகேமுக்கு வந்து தரிசித்துப் பணிந்தனர். இதன் அடிப்படையில்தான் கிறிஸ்துமஸ் பண்டிகையையொட்டி ஒவ்வொரு கிறிஸ்த்துவர் வீட்டிலும் நட்சத்திரம் தொங்கவிடப்படுகின்றது. "விண்மீனைக்கண்டு தெய்வீகக் குழந்தை ஒன்று உலகில் பிறந்திருக்கிறது" என்பதை அவர்கள் உணர்ந்துகொண்டது தெய்வத்தின் அருளால்தான்.

யேசுவின் பிறப்பு ஒரு மலையடிவார குகையில் மாட்டுக்குடிலில் என்று விவிலியம் கூறுகிறது. வீட்டில் இதை நினைவு கூரவே குடிசை அமைத்து மரியாள், சூசை, குழந்தையேசு, ஆடுமேய்ப்பர், ஆடு, மாடு, கழுதை போன்ற பொம்மைகளை அதனுள் வைத்து கிறிஸ்துமஸ் தினத்தை வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யேசுபிரான் மக்களுக்கு அமைதி, அன்பு, மகிழ்ச்சி என எண்ணற்ற நன்மைகளைக் கொண்டுவந்தார் என்றும் "இறைவனின் கருணை உன்னதமானது கருணைகொண்டவர் இறைவனுக்குச் சமமாவர்" என்றும் தேவதூதர் பாடியதாக வரலாறு கூறுகிறது. இந்த மகிழ்ச்சியை மனதில்கொண்டே 18ம் நூற்றாண்டில் ஜேர்மனியில் கிறிஸ்துமஸ் மரம் நட்டு, அதில் பரிசுப்பொருட்களைத் தொங்கவிட்டு கிறிஸ்துமஸ் பண்டிகையைக் கொண்டாடத் தொடங்கினார்கள். அங்கு தொடங்கிய இந்தப் பழக்கம் இன்று உலகம் முழவதும் பரவியுள்ளது.

கிறிஸ்துமஸ் மரத்திற்கு ஒரு பின்னணியும் உண்டு. உலகில் முதல்மனிதன் ஆதாம் இறைவனின் எச்சரிக்கையைப் புறக்கணித்து மரத்தின் பழத்த பழத்தைத்தின்று மனித குலத்திற்கு இழக்கைத்தேடித் தந்தானாம். அந்த மரத்தின் மூலமாகவே தேவமைந்தன் சிலுவை மரத்தில் அறையுண்டு, மக்களுக்கு விடிவு தேடித்தந்தார். அந்த மரத்தின் மூலமாகவே பாவத்தை அழித்து இரட்சண்யத்தைத் தேடித்தந்தார் யேசுபிரான்.

கிறிஸ்துமஸ் இரவில் எட்டு மான்கள் பூட்டப்பட்டு"ஸ்லெட்ஜ்" வண்டியில் கிறிஸ்துமஸ் தாத்தா வந்து குழந்தைகளுக்குப் பரிசுகள் வழங்குவார் என்பதைக் குழந்தைகள் நம்புகின்றனர். குழந்தைகள் தூங்கும் போது கிறிஸ்துமஸ் தாத்தா வந்து அவர்களுடைய பாதணிகள், காலுறைகளில் பரிசுப்பொருட்களை நிரப்பி வைப்பார் என்பதற்காக குழந்தைகள் தூங்கப் போவதற்கு முன் தங்கள் வீட்டின் கதவில் காலுறைகளைத் தொங்க விடுவார்கள். பெற்றோர்களும் அந்தக்காலுறையில் பரிசுப்பொருட்களை வைத்து, கிறிஸ்துமஸ் தாத்தா வந்து அதைக் கொடுத்ததாகக் குழந்தைகளுக்குக் கூறுவது இன்று உலகம் முழுவதும் வழக்கமாக இருக்கின்றது.

கிறிஸ்துமஸ் வாழ்த்து அட்டை அனுப்பும் மரபு 1843ம் ஆண்டில்"பிராட்லி" என்ற மதகுருவால் இங்கிலாந்தில் தொடங்கப்பட்டது. அதைத் தொடர்ந்து உலக நாடுகள் முழவதும் அந்தப் பழக்கம் பரவியது. மொத்தத்தில் கிறிஸ்துமஸ் விழா எல்லோரது விழாவாக இருந்தாலும் குறிப்பாக அதைச் சிறுவர் விழா என்றே சொல்லலாம்!..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நானே உலகின் ஒளி!...

"நானே உலகின் ஒளி" என்று தன்னை உலகிற்கு வெளிப்படுத்துகிறார் யேசுக்கிறிஸ்த்து. அவர் உலகின் இருளைப்போக்க மனுவுருவெடுத்த இறைமகனார். மனிதன் இருளில் பிறக்கிறான். அவன் தன் தாயின் உதிரத்தில் தோன்றிய பொழுதே அவனை இருள் சூழ்ந்துகொண்டது. இவ்வுலகில் பிறக்கும் போது அவன் ஒளியைக்கண்டு கலங்குகிறான், கதறுகிறான், கண்ணீர் வடிக்கின்றான். வேதனையால் துடிக்கின்றான். அவன் உள்ளத்திலும் பாவ இருள் சூழ்ந்திருக்கிறது. இவ்வுலகில் தோன்றும் ஒவ்வொருவனையும் ஒளிர்விக்கின்றார் எம்பெருமான் யேசு. கன்னிமரியாளின் வயிற்றில் யேசு பாலனாக பூமியில் அவதரிக்கின்றார். அவர் உலகின் ஒளியாக அன்பாக, அருளாக, ஞானமாக இவ்வுலகில் பிறந்தார்.

மனிதனை இருளிலிருந்து விலக்கி நிலையான வாழ்வுக்கு வழிகாட்டுகின்றார். அன்போடு அழைக்கின்றார். நானே உண்மையும் உயிரும் என உலகிற்கு வழிகாட்டுகின்றார். "அவரைப் பின் செல்பவர் இருளில் நடவார்" உயிரினும் ஒளியைக் கொண்டிருப்பார். உள்ளத்தில் உள்உயிராய் இறைவனைக்கண்டு சுவைக்க அவர் வழியில் நடக்க நிறைவாழ்வு, நித்திய வாழ்வுபெற அருள் தருகின்றார்." அன்பே இறைவன் என்ற இறையனுபவம் பெறுகின்றான். உள்ளத்தால் விசுவாசிப்பவன் இறைவனுக்கு ஏற்புடையவனாவான். வாயினால் அறிக்கை இடுபவன் மீட்புப் பெறுவான். ஆண்டவரின் பெயரைச் சொல்லி வாழ்பவன் என்றும் இறைவனோடு நிலைத்திருந்து மீட்பு அடைவான். எனவே நாமும் யேசுவின் பிறப்பில் உலகிற்கு நல்ல சமாதானம் கொண்டுவர வேண்டுமென்று காத்து இருப்போமாக!...

திருமதிஜெயா நடேசன்
ஜேர்மனி.

---

**வாசகர்கள் அனைவருக்கும் எமது உளம்கனிந்த நத்தார்-புதுவருட நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்!....**

**மண் சஞ்சிகையினர்...**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்து முதல்ப்பெண் இசையமைப்பாளர்.



உலகம் முழுவதும் தற்போது பல பெண்கள் தங்கள் துறைகளில் சாதனை படைத்து வருகின்றனர். அந்த வகையில் கலைத்துறையிலும் சமீப காலமாக பெண்கள் ஆதிக்கம் இருந்து வருகிறது.

அதே போல் இசையுலகில் இதுவரை ஆண்கள் மட்டும் ஆதிக்கம் செலுத்தி வர முதன் முறையாக (ஜேர்மனி) பிரபாலினி பிரபாகரன் என்ற பெண் இசையமைப்பாளராக அறிமுகமாகவிருக்கிறார்.

ஈழத்தின் முதல் பெண் இசையமைப்பாளர் பிரபாலினி பிரபாகரன் என்பதுகுறிப்பிடத்தக்கது.இவர் இலங்கையில் முதல் தமிழ் இசைத்தட்டு வெளியிட்டுச் சாதனைபடைத்தவரான திரு. பரமேஸ் அவர்களின் புதல்வியாவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடற்கலாலய வெள்ளிவிழா!....

ஜேர்மனி - கிறிபீல்ட்

ஆடற்கலாலயத்தின் வெள்ளிவிழா 18.10.14 அன்று வெற்றி விழாவாக டியூஸ்பேர்க்கில் நடந்தேறியது. ஆடற்கலைமணி நிருத்தியஜோதி றஜனி. சத்தியகுமார் அவர்களின் கலைவாழ்வின் மகுடவிழாவாக அமைந்தது. நாட்டியநாடகம் உட்பட இருபத்தைந்து நடனங்களை அன்று கண்டுகளித்தோம். பிற்பகல் 2.45.மணிக்கு மங்கல விளக்கேற்று வைபவத்துடன் ஆரம்பித்த விழாவை முதலில் ஆடிய புஸ்பாஞ்சலி நடனத்திலிருந்து இறுதியாக ஆடிய மங்களம் வரை ரசிகர்களை கட்டிப்போட்டிருந்தது எனலாம்.

ஆசிரியரின் திறமையை ஒவ்வொரு மாணவர்களிடமும் காணக்கூடியதாக இருந்தது. அது மட்டுமின்றி ஒவ்வொரு மாணவரிடமும் ஆசிரியரின் கவனம் இருந்தது என்பதையும் ஒவ்வொருவருக்கும் அவர் முக்கியத்துவம் கொடுத்துள்ளார் என்பதையும் நடனத்தில் அவதானிக்கக் கூடியதாக இருந்தது. ஆரம்ப நிலையில் உள்ள மாணவர் முதல் அரங்கேற்றம் முடித்த மாணவர்கள் வரை அவரவர் நிலையில் திறமையை வெளிப்படுத்தியமையே அற்புதத்தை தந்தது.

ஆரம்ப மாணவர்கள் தந்த போ சம்போ கீர்த்தனையை சில ஆண் மாணவர்களும் பெண் மாணவர்களும் இணைந்தே ஆடியிருந்தனர். இரு பாலாரின் உடையும் இணைவும் மிக அழகாகவே அமைந்திருந்தன. அரங்கேற்றம் கண்ட மாணவர்களான தீபனா, விதுஷா, பிரவீணா,

நிமலன் போன்றவர்களின் தனி நடனங்கள் எம்மை பூலோகத்தில் இருப்பது போன்ற பிரமையை ஏற்படுத்தியது.

முரளிகௌத்துவ நடனத்தில் கிருஸ்ண அவதாரத்தின் வெவ்வேறு அவதாரங்களையும் மிக அற்புதமாக உணர்வுபூர்வமாக அபிநயித்து ஆடி நிறைந்த கரகோஷத்தை பெற்றனர்.அடுத்து ஆசிரியரின் மாணவர்களும் சேய்களுமான தீபனா, நிர்மலன் ஆடிய பதத்தை எப்படி வர்ணிப்பது? அத்தனை சிறப்பு. நவரசங்களும் அவர்களின் நடனத்தில் மாறிமாறி வரும்போது அவர்கள் நாட்டியத்தில் பெற்ற முதிர்ச்சி காணக்கூடியதாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சாரி பாவம் மிக அற்புதமாக அமைந்திருந்தது. அரங்கேற்றத்தின் பின்னரும் தொடர்து கற்றுவந்ததினால் பெற்ற பயிற்சி அவர்களிடம் மிகப்பெரிய முன்னேற்றத்தை காணக்கூடியதாக இருந்தது.

தொடர்ந்த தீபநடனம் மேடை அனுபவமில்லாத சிறார்கள் மிக கவனமாக அடைவு சுத்தமாக ஆடியமை பாராட்டப்படவேண்டியதே. மகா காளி அம்மன் நடனம் இறை ஆராதனையின் சிறப்பை அபிநயித்ததுடன் மகா காளியின் வடிவங்களும் கதைகளும் மிக அழகாகச் சித்தரிக்கப்பட்டது. அடுத்து பாம்பு, மயில் நடனம். அப்பப்பா அதனை வர்ணிக்க வார்த்தைகளே இல்லை. பாம்பு பாம்பாகவும் மயில் மயிலாகவுமே ஒப்பனை செய்யப்பட்டிருந்தமை அபாரம். விதுஷா மயிலாகத் துள்ளித்துள்ளி ஆடியதுடன் உணர்வுபூர்வமாக மிக அற்புதமாக ஆடினார். அதேபோல் பாம்பாக ஆடிய கௌசிகா மிக அற்புதமாக வளைந்து நெளிந்து ஆடியதுடன் பாம்பின் கோபத்தை தத்ரூபமாக அபிநயித்தார். பாம்பு மயில் நடனத்தை கண்டு களித்த ரசிகர்கள் மண்டபம் அதிர கரகோஷம் செய்தனர்.

இங்கு வர்ணத்தைப் பற்றிக் குறிப்பிடாமல் செல்லமுடியாது. ஆசிரியர் மிக சமயோசிதமாக நிகழ்ச்சிகளை தயாரித்திருக்கிறார் என்பதற்கு இதுவே எடுத்துக்காட்டாக அமைந்தது. கிட்டத்தட்ட ஐம்பது-அறுபது பிள்ளைகளை வைத்து நிகழ்ச்சி செய்யும் போது நேரம் கவனிக்க வேண்டியதாகிறது. ஆகவே உத்தியை பயன்படுத்தி வர்ணத்தின் உத்தராங்கப் பகுதியை மட்டும் எடுத்திருந்தார் . இதனை எட்டு நடனதாரகைகள் ஆடியிருந்தனர். என்ன விறுவிறுப்பு. கால்களில் ஜதிகள் ஸ்வரங்களுடன் போட்டி போட்டு எண்மரின் கால் அடிச்சப்தமே சலங்கை ஒலியை விஞ்சி நின்றது. ஒருவருக்கு ஒருவர் சளைத்தவரில்லை என்பதாய் விறுவிறுப்புடன் ஆடியிருந்தனர். ஒரு செக்கன் இடைவெளி தன்னும் காணமுடியாதபடி ஒரேமாதிரி ஒரே வேகத்தில் ஆடியமை பாராட்டப்பட வேண்டியதே. சஞ்சாரி பாவமும் நிறைவாக இருந்தது. இங்கு ஆசிரியரின் உழைப்பும் பிள்ளைகளின் ஒத்துழைப்பும் பயிற்சிமூலம் உச்சத்தை தொட்டது. இருபத்தைந்து நடனங்களையும் விபரித்துக்கொண்டே போனால் இருபத்தைந்து பக்கங்கள் எழுத வேண்டும்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேபோல் ஐம்பது-அறுபது மாணவர்களையும் பெயர் குறிப்பிட்டு பாராட்ட முடியவில்லையே என்பது என் கவலை. ஆனாலும் தீபனாவின் நடனத்தை இங்கு குறிப்பிடாமல் விடமுடியாது. தீபனாவிடம் காணப்படும் பரதத்துக்குரிய பாவம் 'ஸாத்விகாபிநயம்' என்று சொல்லப்படுவது. அதாவது இயற்கை ஞானம். இயற்கையாகவே அமைந்த உள்ளத்து உணர்வுகளை உணர்ந்து வெளிப்படுத்துதல். இவரின் உடலசைவு அதாவது நளினம் ஒரு பரதநாட்டிய தாரகைக்குரிய அத்தனை அம்சங்களும் பொருந்தியதாக அமைந்திருந்தன.

அடுத்து விமலனும் விதுஷாவும் இணைந்தளித்த சிவன் சக்தி நடனம். பூலோகத்தில் தேவர்கள் கண்டு களித்த தாண்டவத்தை நாமும் கண்டு களித்தோம் என்பதுதான் உண்மை. ஜதிகளின் அழுத்தம் கால்களில் ஒலிக்க, விறுவிறுப்புடன் கூடிய தாண்டவத்தில் இருவரது அபிநய பாவமும் ஜதிக்கோர்வைகளும் போட்டி போட்டன. கை வழி நயனம் செல்ல கண் வழி மனம் செல்ல, மனம் வழி உணர்ச்சி செல்ல, அதிலிருந்து பிறக்கும் நிருத்தமே பரதத்தின் நிறைவாகும். இந்த நிறைவான நடனம் சபையோரைக் கவர்ந்ததால் எழுந்து நின்று கரகோஷம் செய்து சிறப்புப் பாராட்டைத் தெரிவித்தனர். இந்த நடன அமைப்பை ஆசிரியர் றஜனி சத்தியகுமாரின் மகனான நிர்மலனே செய்திருந்தார் என்பதை தெரிவித்த போது சபையோரின் கரகோஷம் வானைப் பிளந்தது.

மேலும் பன்னிரண்டு மாணவர்கள் சேர்ந்து ஆடிய தில்லானாவை வர்ணிக்க வார்த்தைகளே இல்லை. பயிற்சியின் உச்சம். ஒருங்கிணைந்த நடனம். பரதத்தில் காணப்படும் அத்தனை அடவுகளையும் பயன்படுத்திய ஜதிப்பிரஸ்தாரம் மகுடம் அத்தனையும் மிக சுத்தமாகவே இருந்தன. விறு விறுப்பின் உச்சம் அழகான ஆடை அலங்காரத்துக்கு ஒரு ஓ போடலாம்.

கிராமிய நடனத்தையும் இங்கு குறிப்பிடலாம். இவை பாமர நடன வகை என்று கூறுவதுண்டு. இவர்கள் ஆடிய கிராமிய நடனம் பண்படுத்தப்பட்ட சாஸ்திரிய நடனத்துடன் கூடியதானதாக இருந்தது. உடையலங்காரமும், தலையலங்காரம் உட்பட அனைத்தும் ரசிகர்களைக் கவரும் வண்ணம் அமைந்திருந்தன.

தொடர்ந்து நிர்மலன் இயக்கத்தில் அரங்கேற்றம் கண்ட மாணவர்களும், தொடர்ந்து அரங்கேற்றம் காண உள்ள மாணவர்களும் சேர்ந்தே குருவைப்பாராட்டி வாழ்த்திய நடனமாக நடன அமைப்பு செய்திருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவும் தெளிவும் தந்தாய் குருவே' என்ற சிறப்பான பாடலுக்கு அழகாய் நடன அமைப்பு செய்திருந்தனர். மேடை நடுவே ஆசிரியர் பூரிப்புடன் நிற்க, மாணவர்கள் அபிநய பாவத்துடன் பூத்தூவி வாழ்த்தியபோது பார்ப்பவர்கள் கண்கள் பனித்தன.

பிரதம விருந்தினராக அழைக்கப்பட்டிருந்த மதுரக்குரலோன் கண்ணன் அவர்கள் பேசும் போது ஆசிரியரின் திறமையைப் பாராட்டிப் பேசியதுடன் மாணவர்களின் ஒத்துழைப்பையும் பயிற்சியால் பெற்ற திறமையையும் பாராட்டினார். ஆசிரியரையும் அவருக்கு எப்போதும் ஒத்தாசையாக இருக்கும் அவர்தம் கணவரையும் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார். அதேவேளை இந்நிகழ்ச்சியில்' ஆடப்பட்ட நாட்டிய நாடகத்தை திரு கண்ணன் அவர்களே பாடிக்கொடுத்ததாக அவரையும் அவர் தம் மனைவியையும் ஆசிரியர் சார்பாக திரு சத்தியகுமார் பாராட்டிக் கௌரவித்தார்.

நிகழ்ச்சிகளின் இடையிடையே மாணவர்களுக்கு நினைவுப்பரிசுகள் கொடுத்துப் பாராட்டியமை இங்கு குறிப்பிடப்பட வேண்டியதே.

அத்துடன் பலர் ஆசிரியரைப் பாராட்டிக் கௌரவித்தனர். வெற்றிமணி பத்திரிகை ஆசிரியர் திரு சு.சிவகுமாரன், மண் சஞ்சிகை ஆசிரியர் வ.சிவராசா, ஜேர்மன் தமிழ்க் கல்விச்சேவையின் தலைவர் திரு பொ.சிறீஜீவகன் ஆகியோர் நடன ஆசிரியரின் திறமையையும் மாணவர்களின் நடனங்களையும் பாராட்டிப் பேசியதுடன் அவரது கணவரின் ஒத்துழைப்பை பாராட்டி பேசினர். இருவரையும் பொன்னாடை போர்த்தி கௌரவித்தபோது சபையே கரகோஷம் செய்து மகிழ்ந்தது. பலவகையான நடனங்களைக் கண்டுகளித்த மகிழ்வோடு இரவு பத்துமணியளவில் விழா இனிதே நிறைவுபெற்றது.

திருமதிகலைவாணி
ஏகானந்தராசா.
சங்கீதஆசிரியர்
ஜேர்மனி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக மக்கள் வாழ்வில்.....

இலங்கை, மண் மூடிய துயர வரலாறு 29.10.2014
1964 - 2014 சாஸ்திரி – சிறீமா ஒப்பந்தம்: 50 ஆண்டுகள் நிறைவு

இதுவும் இலங்கைத் தமிழர்களின் துயரக் கதைதான். பஞ்சத்தாலும் வறுமையாலும் அடிபட்டு, இலங்கைக்குப் பிழைக்கச் சென்று, குத்திக் குதறப்பட்ட இந்தியத்தமிழர்களின் துயரக் கதை. இந்தியர்கள், இலங்கையர்கள் இரு தரப்பினராலும் பேசமறுக்கப்படும் கதை. தமிழக வரலாற்றில் கொடூரமான காலகட்டம் 1835 -1940. நிலப்பிரபுத்துவமுறை, சாதிக்கொடுமைகள்,கோரப்பஞ்சம், துரத்தும் வறுமைபல்லாயிரக் கணக்கானோர்பசியால்செத்த காலகட்டம்ஆங்கிலேயர்கள் சூழலைத்தமதாக்கிக்கொண்டார்கள். இந்தியாவையும்இலங்கையையும் ஆண்ட அவர்கள்,இலங்கையில் தங்களுடைய ஆட்கள்நடத்திய கோப்பி,தேயிலை, ரப்பர் தோட்டங்களுக்கு ஏழைத் தமிழர்களைக் குறிவைத்தனர். கங்காணிகள் மூலம் நடத்தப்பட்ட வேட்டை இது. ஒரு ஊரில் நுழைவது. நல்ல வேலை, நல்லசாப்பாடு, நல்ல கூலி என்று ஆசை காட்டுவது. கொஞ்சம் பணத்தை முன்பணமாகக்கொடுத்து ஆட்களைக் கூட்டிச் செல்வது. தனுஷ்கோடி வரை கால்நடையாகவே நடத்திச்செல்லப்பட்ட இவர்கள் அங்கிருந்து தோணிகள் மூலம் கடல் கடந்து, மீண்டும்கால்நடையாகவே இலங்கையின் தோட்டங்களுக்கு நடத்திச் செல்லப்பட்டனர். நடைப்பயணத்தின்போதே பலர் இறந்தனர். பணத்தாசையின் காரணமாக, கங்காணிகள் 100பேரை ஏற்ற வேண்டிய தோணிகளில் 500 பேர், 1,000 பேர் வரை ஏற்றிச் சென்றதால், பலதோணிகளை ஆழி தின்றது. இப்படித்தான் ஆயிரக் கணக்கான ஏழைத் தமிழர்களுடன் பயணித்தஆதிலட்சுமி, கப்பலும் கரைசேர்வதற்கு முன்பாகவே கடலில் மூழ்கியது.

1841-49-க்கு இடைப்பட்ட காலத்தில் மட்டும் 70 ஆயிரம் தமிழர்கள் இப்படிப்பலியானதைப் பதிவுசெய்திருக்கிறது "கொழும்பு ஒப்சர்வர்" பத்திரிகை. இங்கிருந்து சென்றவர்கள் கண்டி, ஹட்டன், மாத்தளை, புஸல்லாவ, நுவரேலியா எனப் பல்வேறு இடங்களிலும் அடர்வனங்களைத் திருத்திப் பெருந் தோட்டங்களாக மாற்றினார்கள். மலைகளில் சாலைகளை உருவாக்கினார்கள். சுரங்கங்களை வெட்டி ரயில் பாதை உருவாக்கினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொத்தடிமைகளின் நிலையிலேயே இருந்தது. மலையகத் தமிழர்கள் இலங்கையின் பொருளாதாரத்தைத் தூக்கிச் சுமந்தனர்.

இலங்கையர்களோ கள்ளத்தோணி, தோட்டக் காட்டான், வடக்கத்தியான், பறத்தமிழன், என்று பல வசைச் சொற்களைச் சொல்லி இழிவு படுத்தினார்கள். இந்திய வம்சாவளித் தமிழர்களை நாட்டை விட்டுத் துரத்த வேண்டும் என்று பேசினார்கள். இந்திய வம்சாவளித் தமிழர்கள் 1935 காலகட்டத்தில் அநீதிகளை எதிர்த்துப் போராட்டத்தில் இறங்கினர். தஞ்சாவூரிலிருந்து ஹட்டனில் குடியேறிய கோ. நடேசய்யர், மலையக மக்களின் அரசியல் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்தார்.சி.வி. வேலுப்பிள்ளை, இளஞ்செழியன், இர. சிவலிங்கம் என அடுத்தடுத்துப் பலதலைவர்கள் மலையக மக்களின் அரசியலை முன்னெடுத்தனர்.

இலங்கையிலிருந்து மலையகத் தமிழர்களைத் துரத்துவதில் முனைப்பாக இருந்த அரசு, ஒருகட்டத்தில் 10 லட்சம் மலையகத் தமிழர்களை நாடற்றவர்களாக ஆக்கியது. ஏறத்தாழ 130 ஆண்டுகளாக இலங்கைக்காக உழைத்தவர்கள் அநாதைகளாக ஆக்கப்பட்டார்கள். இந்த 10 லட்சம் பேரையும் இந்தியாவுக்கு அனுப்ப முயன்றது இலங்கை. இந்தியாவோ ஏற்க மறுத்தது. ஒருகட்டத்தில் வேறு வழியில்லாமல், கிட்டத்தட்ட ஆளுக்குப் பாதி என்பதுபோல, இரு அரசுகளும் ஒரு ஒப்பந்தத்தைச் செய்தன. இதன்படி 5.25 லட்சம் பேர் இந்தியாவுக்குத் திரும்ப அழைக்கப்பட்டார்கள். 1964-ல் இலங்கை அதிபர் சிறீமாவும், இந்தியப் பிரதமர் சாஸ்திரியும் செய்துகொண்ட ஒப்பந்தம் இந்தமாதம் 50 ஆண்டுகளை நிறைவுசெய்தது. உறவுகளை, உடைமைகளை, உரிமைகளை என இடைப்பட்ட 130 ஆண்டுகளில் கொஞ்சநஞ்சம் கிடைத்தவற்றையும் பறிகொடுத்து இரு பிரிவாகப் பிரிக்கப்பட்டனர் மலையகத் தமிழர்கள்.

இலங்கை 1948, பிப்ரவரி 4-ல் சுதந்திரம் அடைந்தது. டி.எஸ். சேனநாயகா அதிபர் ஆனார். இந்திய வம்சாவளி மக்களின் குடியுரிமையைப் பறிக்கும் சட்ட மசோதாவை அவர் கொண்டுவந்தார். அதை ஆதரித்த 53 உறுப்பினர்களில் சுந்தரலிங்கம், எஸ். மகாதேவன்உள்ளிட்டவர்களும் அடக்கம். ஆனால், ஈழத்தந்தை செல்வநாயகம், இன்று இந்திய வம்சாவளித் தமிழர்களுக்கு ஏற்பட்ட அவலம், நாளை ஈழத் தமிழர்களுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



29.10.2014 மலையகத்தில் இடம்பெற்ற மணசரிவு அனர்த்தத்தின் சில படங்கள்.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படும் என்று அன்றே எச்சரித்ததோடு, அதை எதிர்த்தும் வாக்களித்தார். இலங்கையின் பூர்விகத் தமிழர்களால் இவர்களுக்கு ஆதாயங்கள் இல்லை என்றாலும்,தீமைகள் காத்திருந்தன. சிங்கள இனவெறி எப்போதெல்லாம் பூர்விகத் தமிழர்களைக்குறிவைத்ததோ, அப்போதெல்லாம் இவர்களையும் குறிவைத்தது. சிங்களவர்களின்கைக்கெட்டும் தூரத்திலிருந்த இவர்களது வீடுகளும் வணிகக் கூடங்களும் உயிர்களும் அவர்களின் வன்முறைக்கு இலக்காயின. வளர வளரக் கவாத்து செய்யப்படும் தேயிலை மரங்களைப் போல இந்திய வம்சாவளி மலையகத் தமிழர்களும் வரலாறு நெடுகிலும் வெட்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்தியர் என்ற காரணத்தாலும் சாதியாலும் ஒவ்வொரு கணமும் ஒதுக்கப்பட்டுக்கொண்டிருக்கிறார்க ள். கடந்த 200 ஆண்டுகளாகச் சிலுவைசுமப்பதுபோல இலங்கையைச் சுமந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கான இடம் இலங்கை அரசியலில் இன்னமும் விளிம்பு நிலையிலேயே இருந்துவருவது கவலைக்குரிய விடையமே!...

இரா. வினோத், தொடர்புக்கு: vinoth.r@thehindutamil.co.in

---

முறைப்பாட்டு விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்தவற்கான அறிவுறுத்தல்கள்

அன்புடையீர்!

ஐக்கிய நாடுகள் அவையில் நடந்து வரும் இலங்கை தொடர்பான மனித உரிமை மீறல் விசாரணைகளுக்கு தங்களுக்கு விடுதலைப் புலிகளாலும் அரசபடைகளாலும் ஏற்படுத்தப்பட்ட மனிதஉரிமை மீறல் சம்பவங்களையும் அதன் விளைவுகளையும் விண்ணப்பப் படிவத்தில் நிரப்பி சுவிஸ் ஜெனிவாவில் உள்ள ஐ.நா. அமைப்புக்கு தபால் முலமாகவோ அன்றேல் மின்னஞ்சல் மூலமாகவோ அனுப்பி வைக்கலாம்.

தபால் முகவரி
OHCHR Investigation on SRILANKA
UNOG-OHCHR
8-14 Rue de la paix
CH-1211 Geneva 10
Switzerland
மின்னஞ்சல் முகவரி: OISL_submissions@ohchr.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லண்டன் தமிழ்வானொலியின் பொன்மாலைப்பொழுது!....

ஐரோப்பிய பொன்மாலைப் பொழுது-135 மிக மிகச்சிறப்பாக நடைபெற்றிட ஆதரவு தந்த அனைவருக்கும் அன்பு நன்றி.

நிறைந்த மக்கள் மத்தியில் சன்றைஸின் வெள்ளிவிழாவும் பொன்மாலைப்பொழுதும் மிக மிகச் சிறப்புற கடந்த 21-09-2014 அன்று நடைபெற்றது. ஊடகப் பணியில் 25 வருடச் சேவையை நிவர்த்தி செய்து இன்றும் திடமான பணி தொடரும் திரு.ஜனா அவர்கள், திரு. நடாமோகன் அவர்களின் அளப்பெரும் பணி பாராட்டு விழா மிக மிக அழகுற நேர்த்தியுடன் கௌரவம் பெற்று நின்றது. கண்களில் நீர்ததும்ப எதிர்நீச்சல் போட்ட திசைவழியைமீண்டும் திரும்பிப் பார்க்கும் மாபெரும் சக்தி கொண்ட அரங்க வெற்றியைத் தந்தது.

ஜேர்மனிய நாட்டின் கௌரவிப்பு நேரத்தில் திருமதி. மனோன்மணி சண்முகநாதன் அவர்களும் திருமதி. சரோஜினிதேவி பொன்னம்பலம் அவர்களும் கௌரவத்தை வழங்க திரு. திருமதி.தங்கரத்தினராஜா அவர்கள் வெகுமதி மிக்க வெள்ளிவிழாப் பரிசினை வழங்கி கௌரவித்தார்கள். வாழ்த்துரையை பாடலாக .கவிக்கோ பரம விசுவலிங்கம் இணைத்து ஞானக்கதிரோன் என்ற வரைமுறை வாகையைச் சூடினார். திருமதி கோசல்யா சொர்ணலிங்கம் கவிவீச்சால் வாழ்த்திணைக்க திரு. சிவராஜா தனுஜன் வாழ்த்துப் பா வழங்கிக் கௌரவித்தார். ஒடிவிளையாடு பாப்பாக்கள் இணைந்து கனடா நாட்டிற்கு சென்று வரும் விமானரிக்கற்றை வழங்கி விருது பெற்ற மகிழ்வினை உற்சாகப்படுத்தி மகிழ்ச்சி அடைந்தனர்.

தொடர்ந்து நெதர்லாந்து நேயர்கள் திரு நடாமோகன் அவர்களின் 25 வருடச் சேவையையும் சன்றைஸ் வானொலிச் சேவையையும் கௌரவப்படுத்தி பாராட்டினார்கள். கொலன்ட் நட்புறவு ஒன்றியமும் , சலங்கையொலி நர்த்தனாலயம் என்பன சீர் கொண்ட பணியை ஊடகத்தின் பங்காற்றலை பெருமையுடன் கருதுகோளாக்கி வாழ்த்துப் பாக்களாலும் பரிசில்களாலும் ஏற்புள்ள கௌரவமுறைமையை அன்புசொரிந்து வழங்கி நின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவிஸ் நாட்டினர் மதிப்பான
பாங்கில் ஊடகத்தின்
சேவைநலத் தொண்டை
சீரனமைப்பின் வழிகாட்டலை
ஆய்வுத்திறன்மதியென அங்கீகாரம்
அளித்து திரு. நடாமோகன்
அவர்களை கௌரவித்தமை
உள்ளம் நெகிழ்ந்திடும் உயிரோட்ட
முகிழ்ப்பை அரங்கமன்றை
ஆக்கிரமிக்க வைத்தது.

பாரிஸ் நாட்டின் சார்பில்
வாழ்த்துப்பா வழங்கி கௌரவித்தார்
திரு.இலக்ஸ்மன் அவர்கள்.
அனைவரும் இணைந்தது
சன்றைஸ் வானொலி
பெற்ற உயர்ச்சியே.அதிலும்
ஊடகவியாளர்கள் இருவரும்
ஒருங்கிணைந்து கௌரவம்
பெற்றமை தாம் நடந்து வந்த
வழிகளை பகிர்ந்தமை மிக்க
சிறப்புற அமைந்தது.

அனைத்திற்கும் உறுதுணையாய்
இருந்த அனைவருக்கும் மனம்
லொட்டோ சீட்டுக்களைப் பெற்று
இந்த விழாவும் பாமுகமும் சிறப்பு
பெற ஒத்துழைத்த அனைவருக்கும்
மிக்க மிக்க நன்றிகள். ஸ்பொன்சர்
தந்து நின்ற அனைவருக்கும்
பிறநாடுகளில் இருந்த வந்து

இணைந்து ஊக்கமும்
உற்சாகமும் தந்து பொன்மாலைப்
பொழுதும் வெள்ளிவிழாவும்
புரட்சிகரப் பொன்மாலைப் பொழுதாக
வெற்றி நடை போட வைத்த
அனைவருக்கும் எங்கள் குடும்பம்
சார்ந்து மாபெரும் நன்றி.

திருமதிசெந்தா ஜெகதீசன்
ஜேர்மனி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுவிட்சர்லாந்தில் விவசாயி ஒருவர் உலகத்திலேயே மிகப்பெரிய அளவு கொண்ட பூசணிக்காயை விளைவித்து சாதனை புரிந்துள்ளார்.

செயிண்ட் காலன் மாநிலத்தில் சூரிச் ஏரியின் எதிரே அமைந்துள்ள ஜோனா என்ற கிராமத்தில் கடந்த செப்டெம்பர் மாதம் விவசாயிகளுக்கான போட்டி ஒன்று நடைபெற்றுள்ளது.

அந்த போட்டியில் பெனி மேயர் என்ற விவசாயி 953.5 கிலோ எடையுள்ள பூசணிக்காயை அறுவடை செய்ததன் மூலம் உலகிலேயே மிகப்பெரிய பூசணிக்காயை வளர்த்து சாதனை படைத்துள்ளார்.

இதுவரை அமெரிக்க விவசாயிகள் மட்டுமே பூசணி வளர்ப்பில் சாதனை புரிந்து வந்த நிலையில் தற்போது சுவிஸ் விவசாயி இந்த சாதனையை படைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

மேலும், இந்த விவசாயி கடந்த 2013ம் ஆண்டில் நடந்த போட்டியின் போது 1053.5 கிலோ எடையுள்ள ராட்சத பூசணிக்காயை வளர்த்துள்ளார்.

ஆனால் அந்த பூசணிக்காயில் சிறிய துளை இருந்ததால் அந்த பூசணிக்காயிற்குப் பரிசு அளிக்கப்படவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியாவில் சிறுவர் தினம்...

வவுனியாவிலிருந்து மேழிக்குமரன்

வவுனியா வேப்பங்குளம் இந்து அன்பகம் சிறுவர் இல்லம் 1.10.2014 அன்று சிறுவர்தினம் கொண்டாடியது. மாலை நான்குமணிக்கு விழா ஆரம்பமானது. விழாவுக்கு வருகைதந்த பிரதம விருந்தினர்கள், சிறப்பு விருந்தினர்கள் இல்லச் சிறுவர்களால் மாலை அணிவித்து வரவேற்கப்பட்டனர். பிரதமவிருந்தினர்கள், சிறப்பு விருந்தினர்கள் குத்துவிளக்கு ஏற்றி விழாவினை ஆரம்பித்து வைத்தனர்.

திருமுறைகள், இல்லக்கீதம், வரவேற்புரை ஆகியவற்றை இல்லச்சிறுவர்கள் நிகழ்த்தினர். இல்லச்சிறுவர்களின் வரவேற்பு நடனத்தைத் தொடர்ந்து இந்து அன்பகத்தின் நிர்வாகியும் விழாத்தலைவருமான சிவச்செல்வி.கு.ஜெயராணி அவர்கள் தலைமையுரை ஆற்றினார். இல்லத்துக்கான தேவைகளை குறிப்பிட்டு அனைவரினதும் உதவியை கோரினார். சிறுவர்தினம் கடந்தபல வருடங்களாக கொண்டாடப்படுவதாகக் குறிப்பிட்டார்.விழாவின் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்ட முன்னாள்பாராளுமன்ற உறுப்பினர் திரு.சிவநாதன் கிசோர் அவர்கள் சிறுவர்தின விழாக்கள் இதுபோன்ற இல்லங்களில் நடாத்தப்படுவது சிறப்பானது எனக்குறிப்பிட்டதோடு, இல்லத்துக்கு தேவையான உதவிகளை தான் செய்து வருவதாகவும் இனியும் செய்வேன் என உறுதிமொழி அளித்தார்.

அதனை தொடர்ந்து சிறப்பு விருந்தினர்கள் உரையாற்றினர்.விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட வவுனியா பொலிஸ்நிலைய சிறுவர் பெண்கள் பிரிவு பொறுப்பதிகாரி திருமதி.சியாமலி திசநாயக்கா அவர்கள் சிறுவர்களை மேடையில் அழைத்து அன்பளிப்புகள் வழங்கினார்.

விழாவின் சிறப்பு நிகழ்வாக எழுத்தாளர் தமிழ்மணி. கே.கே.அருந்தவராஜா (மேழிக்குமரன்) அவர்கள் எழுதி இயக்கிய "நீர்வளம் காப்போம்" என்ற தலைப்பிலான வில்லிசை இல்லச்சிறுவர்களால் அரங்கேற்றப்பட்டு பலத்த கரகோசத்துடன் வரவேற்பைப் பெற்றது.இல்லச்சிறுவர்களின் இன்னிசை, கவிதை, குழுநடனம், நாடகம் ஆகியன இடம்பெற்றன. சபையோர் கரகோசம் செய்து இல்லச்சிறுவர்களுக்கு உற்சாகமூட்டி வரவேற்பளித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோபல் பரிசுகள் "2014" - முழு விபரங்களுடன்

2014ம் ஆண்டிற்கான நோபல் பரிசுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

ஆல்ஃபிரட் நோபெல் என்ற வேதியியலாளரால் 1895ம் ஆண்டு முதல் தொடங்கப்பட்ட இந்த பரிசு, நோபல் என்ற அவரின் பெயரிலேயே 1901ம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது.

நோபல் பரிசு ஒப்பற்ற ஆய்வு மேற்கொண்டவர்களுக்கும், பெரும் பயன் விளைவிக்கும் தொழில்நுட்பங்களை கண்டுபிடித்தவருக்கும் சமூகத்திற்கு அரிய தொண்டாற்றியவர்களுக்கும் வழங்கப்படுகிறது.

இயற்பியல், வேதியியல், மருத்துவம், இலக்கியம், பொருளாதார அறிவியல் மற்றும் அமைதி ஆகிய பிரிவுகளில் நோபல் பரிசு வழங்கப்பட்டு வருகிறது.

இந்த பரிசுகளை வருடந்தோறும் நோபல் அவர்களின் நினைவு தினமான டிசம்பர் மாதம் பத்தாம் நாள் அன்று வழங்குகின்றனர்.

நோபல் உயில் எழுதும் சமயத்தில் நோர்வேயும், சுவீடனும் ஒரே கூட்டுப்பிரதேசமாக இருந்ததால், நோர்வேயில் அமைதிக்கான பரிசும், சுவீடனில் மற்ற பரிசுகளும் வழங்கப்படுகின்றன. இந்நிலையில் 2014-ம் ஆண்டிற்கான நோபல் பரிசு பெறுபவர்களின் பெயர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

## இயற்பியலுக்கான நோபல் பரிசு..

ஜப்பானைச் சேர்ந்த இசாமு அகசாகி(Isamu Akasaki), ஹிரோஷி அமானு(Hiroshi Amano) , நகமுரா(Shuji Nakamura) என்ற மூன்று விஞ்ஞானிகளுக்கு இயற்பியலுக்கான நோபல் பரிசு பகிர்ந்து வழங்கப்படுகிறது.

LIGHT EMITTING DIODE(LED) எனப்படும் குறைந்த மின்சாரத்தைக் கொண்டு அதிக ஒளியைத் தரும் விளக்குகளில் நீல நிற LED-ia கண்டுபிடித்ததற்காக இந்தப் பரிசு வழங்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேதியியலுக்கான நோபல் பரிசு:

அமெரிக்காவைச் சேர்ந்த ரிக் பெட்ஜிக்(Eric Betzig) , வில்லியம் மோர்னர்(William E. Moerner) மற்றும் ஜேர்மனியைச் சேர்ந்த ஸ்டெ∴பான் ஹெல்(Stefan W. Hell) என்ற மூன்று விஞ்ஞானிகளுக்கு வேதியியலுக்கான நோபல் பரிசு பகிர்ந்து வழங்கப்படுகிறது.
Fluorescence Microscopy எனப்படும் ஒளி நுணுக்குக்காட்டியை வடிவமைத்தற்காக இவர்களுக்கு இந்த பரிசு வழங்கப்படுகிறது.

## மருத்துவ துறைக்கான நோபல் பரிசு:

அமெரிக்காவைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர் ஜான் X'fP/Ng(John O'Keefe) மற்றும் நோர்வே நாட்டைச் சேர்ந்த மருத்துவ தம்பதியரான மே-பிரிட் மோசர்(May-Britt Moser) , எட்வர்ட் ஐ. மோசர்(Edvard I. Moser) ஆகியோருக்கு நோபல் பரிசு பகிர்ந்து வழங்கபடுகிறது.

மூளையில் செயல்படும் அணு எது என்றும் அது எப்படி செயல்படுகிறது என்பதை பற்றியும், மூளையில் உள்ள இடமறியும் உயிரணுக்கள் நாம் சென்று வரும் இடங்களுக்கான வரைபடத்தை மூளையில் எவ்வாறு உருவாக்குகிறது போன்றவற்றை கண்டுபிடித்ததற்காக இந்தப் பரிசு வழங்கப்படுகிறது.

## இலக்கியத்திற்கான நோபல் பரிசு:

பிரான்ஸை சேர்ந்த பேட்ரிக் மோடியானோ(Patrick Modiano) என்ற நாவலாசிரியருக்கு இலக்கியத்திற்கான நோபல் பரிசு வழங்கப்படுகிறது

## பொருளாதார அறிவியலுக்கான நோபல் பரிசு:

பிரான்ஸை சேர்ந்த ஜீன் டிரோல்(Jean Tirole) என்ற பொருளாதார நிபுணருக்கு பொருளாதார அறிவியலுக்கான நோபல் பரிசு வழங்கப்படுகிறது.
சக்திவாய்ந்த நிறுவனங்கள் கோலோச்சும் இன்றைய பொருளாதாரக் காலக்கட்டத்தில் தொழிற்துறையை ஒழுங்கமைத்தல் பற்றிய இவரது ஆய்வுப் பங்களிப்பிற்காக இந்த பரிசு வழங்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமைதிக்கான நோபல் பரிசு:

இந்தியாவைச் சேர்ந்த கைலாஷ் சத்யார்த்திக்கும்(Kailash Satyarthi) , பாகிஸ்தானை சேர்ந்த மலாலாவுக்கும் (Malala Yousafzai) அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்படுகிறது.

குழந்தைகள் உரிமைக்காக குரல் கொடுத்து வருவதற்காக கைலாஷ் சத்யார்த்திக்கும், பெண் கல்விக்காக குரல் எழுப்பி வருவதற்காக பாகிஸ்தானை சேர்ந்த மலாலாவுக்கும் நோபல் பரிசு வழங்கப்படுகிறது. இந்திய சமூக ஆர்வலர் கைலாஷ் சத்யார்த்தி, பாகிஸ்தான் சிறுமி மலாலா யூசுப்சாய் இருவரும் 2014-ம் ஆண்டுக்கான அமைதிக்கான நோபல் பரிசை பகிர்கின்றனர்.குழந்தைகள் நல உரிமைகளுக்காக பல்வேறு அமைதிவழிப் போராட்டங்களை நடத்தியது, குழந்தைகளின் கல்விக்கான உரிமைகளுக்காக போராடியது உள்ளிட்ட இவர்களது தன்னலமற்ற பங்களிப்புக்காக அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டுள்ளதாக நோர்வே நோபல் கமிட்டி தெரிவித்துள்ளது. டெல்லியில் வசித்து வரும் 60 வயதாகும் கைலாஷ் சத்யார்த்தி, 1990ஆம் ஆண்டு முதல் குழந்தைத் தொழிலாளர்கள் என்ற சுரண்டலை எதிர்த்து அறவழியில் போராட்டம் நடத்தி வருகிறார். இவரது குழந்தைகள் மீட்பு அமைப்பு இதுவரை 80,000 குழந்தைகளை பல்வேறு விதமான சுரண்டல்களிலிருந்து மீட்டு மறுவாழ்வு அளித்துள்ளது.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதநேயப்பணியில் இணைந்துகொண்டவர்கள்!..

தாயகத்தில் ஆதரவற்ற சிறார்களின் வாழ்நாள் மற்றும்கல்விச்செலவுகளைப் பொறுப்பேற்றுஉதவும் மனிதநேயப்பணிகளில் மண் சஞ்சிகையோடு இணைந்து கரம்கொடுத்துவரும் அன்பு உள்ளங்களை நேசத்துடன் வாழ்த்துகின்றோம்.எனவே நீங்களும் இந்தப்பணியுடன் இணைந்துஉதவலாம்.இதுவரைஇத்திட்டத்தில் இணைந்து உதவிவரும் நல்லுள்ளங்களின் விபரம்....

01. திருமதி.சிவதர்சினி.பிராங்ளின் - ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு - வவுனியா) - 480-00 யூரோ
02. திரு.திருமதி.யஜிந்தா.ராஜ்மோகன் - ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு -மட்டக்களப்பு - 480-00 யூரோ
03. செல்வன்.விஷ்ணு,செல்வி.பவுத்ரா.விஜயகௌரி-சுவீஸ்லாந்து
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு - கிளிசொச்சி - 480-00 யூரோ
04. செல்வன்.நகுல்.துரையரங்கன - ஜேர்மனி.
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு - திருகோணமலை- 480-00 யூரோ
05. செல்வி.அஜந்தி.அழகராசா - பிரித்தானியா
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு - வவுனியா - 480-00 யூரோ
06. செல்வன்.ஜெய்சன்.ஜெயபாலன் - பிரித்தானியா
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு - திருகோணமலை- 480-00 யூரோ
07. திருமதி.பராசக்தி.பரமசாமி - பிரித்தானியா
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு -வவுனியா - 480-00 யூரோ
08. திருமதி.ரதி.சின்னத்துரை - பிரித்தானியா
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு - வவுனியா - 480-00 யூரோ
09. திருமதி.பிரிந்தாவனி.தனபாலசுந்தரம் - ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு - வவுனியா - 480-00 யூரோ
10. திருமதி.ஸ்ரெவ்வானி.அம்மானுவல் - ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு - வவுனியா - 480-00 யூரோ
11. செல்விகள்.வினிஷா.இராஜ்குமார்,தீபா.தர்மராசா - ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு -மட்டக்களப்பு) - 240-00 யூரோ
12. செல்வி.சுகிர்தா.தவராஜ் - ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச் செலவு-கிளிநொச்சி - 200-00 யூரோ
13. செல்வி.நந்தனா,செல்வன்.ராகுல்.குமரன் - ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு - மட்டக்களப்பு - 200-00 யூரோ
14. செல்வன்.சியாந்த்.எமில்.சர்வானந்தன் - ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு - வவுனியா - 200-00 யூரோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதரவற்றோர் நிதி உதவிக் கணக்கு

ஆரம்ப இருப்பு 30.09.2014 +2814-21

அன்பளிப்புகள்:-

01. திருமதி. சிவதர்சினி பிராங்ளின் - Duisburg +80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
02. திருமதி. ரதி சின்னத்துரை - London +80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
03. செல்வி. பவித்ரா, செல்வன். விஷ்ணு-விஜயகௌரி - Swiss +80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
04. திரு.திருமதி. யஜிந்தா. ராஜ்மோகன் - Duisburg +80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
05. செல்வி. அஜந்தி. அழகராசா - London +80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
06. செல்வன். ஜெய்சன். ஜெயபாலன் - London +80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
07. திருமதி. பராசக்தி. பரமாமி - London +80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
08. செல்வன்.நகுல்.துரையரங்கன் - Essen +80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
09. திருமதி.பிரிந்தாவனி. தனபாலசுந்தரம் - Weeze +80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்)
10. திருமதி.ஸ்ரெவ்வானி.இம்மானுவல் - Essen +80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்தஅன்பளிப்பு)
11. செல்விகள். தீபா. தர்மராசா, வினிஷா. ராஜ்குமார், - Gottingen +40-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
12.செல்வி.நந்தனா,செல்வன்.ராகுல்.கனகராசா - Mönchengladbach +30-00
(ஆதரவற்றசிறார்ஒருவரின் கல்விச்செலவு மாதாந்த அன்பளிப்பு)
13. செல்வி.சுகிர்தா.தவராஜ் - Wadgassen + 30-00
(ஆதரவற்றசிறார்ஒருவரின் கல்விச்செலவு மாதாந்த அன்பளிப்பு)
14. செல்வன்.ஜோய். சியாந்த் .எமில் சர்வானந்தன் - Blieskastel + 30-00
(ஆதரவற்றசிறார்ஒருவரின் கல்விச்செலவு மாதாந்த அன்பளிப்பு) --------

3704-21



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| | | | + 3704-21 |
| 5. திரு.சாந்தலிங்கம் சிவகுமாரன் | - Pforzheim | | + 20-00 |
| | | | -------- |
| | | | 3724-21 |

அனுப்பியது: –

| | | |
|---|---|---|
| 1. இந்து அன்பகம் சிறுவர் இல்லம்- வவுனியா | 500-00 | |
| வங்கிக்கட்டணம் | 35-00 | |
| | ------- | |
| | 535-00 | |

வங்கிவரி: –

| | | | |
|---|---|---|---|
| 31.07.2014 | -- 9-41 | | |
| 31.08.2014 | -- 10-88 | | |
| 30.09.2014 | -- 7-41 | | |
| 31.10.2014 | -- 10-22 | | |
| | ----- | | |
| | 37-92 | 37-92 | |
| | | ------ | |
| | | 572-92 | |
| | | | - 572-92 |
| | | | --------- |
| 31.10.2014 ல் மீதி கையிருப்பு | | | + 3151-29 |
| | | | --------- |

## பொன்மொழி:-

ஏழைகள், இலயாதவர்கள் முகம் மலரும்போது நாம் வணங்கும் இறைவனின் உள்ளமும் மலர்ச்சி பெறுகின்றது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவ்வாண்டின் இலக்கிய விருதுகள் (இலங்கை)

## தேசிய சாஹித்திய விருதுகள் (தமிழ் மொழி) - 2014

அதியுயர் சாஹித்திய ரத்னா விருது - தெளிவத்தை ஜோசப்

சிறந்த நாவல் "குடிமைகள் தெணியான்

சிறந்த இளைஞர் நாவல் "அட்டாதொட்டி" ஓ. கே. குணநாதன்

சிறந்த சிறுகதை நூல் "வெந்துதணிந்தது காலம்" மு. சிவலிங்கம்

சிறந்த கவிதை நூல் "ஆண்கேணி" த. உருத்திரா

சிறந்த சிறுவர் இலக்கியம் "அமைதிப் பூங்கா" யோ.யோன்சன் ராஜ்குமார்

சிறந்த புலமைத்துவ ஆய்வு "சுதேச மருத்துவம் பற்றிய தமிழ் நூல்கள்" கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன்

சிறந்த நானாவித இலக்கியம் "அங்கோர் உலகப் பெருங்கோயில்" ஞா பாலச்சந்திரன்

சிறந்த மொழிபெயர்ப்பு நூல் "சிறுகதைகள் தமிழில் இருந்து ஆங்கிலத்திற்கு" சோ. பத்மநாதன்

## 16 ஆவது கொடகே தேசிய சாகித்திய விருதுகள் - 2014

சிறந்த நாவல் "குடிமைகள்" தெணியான்
சிறந்த சிறுகதைகள் "இது நித்தியம்" மு. பஷீர்
சிறந்த சிறுகதைகள் "வெந்து தணிந்தது காலம்" மு. சிவலிங்கம்
சிறந்த கவிதை நூல் "சிவப்பு டைனோசர்கள்" சு. தவச்செல்வன்
முதல்நூலை படைத்தபடைப்பாளிக்கான விசேஷட பரிசு. "இரவின் மழையில்" ஈழக்கவி (ஏ.எச்.எம்.நவாஸ்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கு . சின்னப பாரதி இலக்கிய அறக்கட்டளை (நாமக்கல் விருதுகள் 2014)

முதன்மை விருது மற்றும் ரூபா 1,00, 000 பெறுபவர்
பேரா. அருணன் "காலந்தோறும் பிராமணீயம்"

மற்றும் இலக்கிய ஆய்வுக்காகசிறப்பு விருது மற்றும் ரூபா 10,000 பெறுபவர்கள்:

நாவல் "குடைநிழல்" தெளிவத்தை ஜோசப் (இலங்கை)
சிறுகதை "தவிக்கும் இடைவெளிகள்" உஷா தீபன் (தமிழ் நாடு)
சிறுகதை "இப்படியுமா" ரி. இளங்கோவன் (பாரிஸ்)
சிறுகதை "வெந்து தணிந்தது காலம்" மு. சிவலிங்கம் (இலங்கை)
மொழிபெயர்ப்பு "நள்ளிரவின் குழந்தைகள்" சல்மான் ருசுஷ்டி
தமிழில் கா. பூரணச்சந்திரன் (தமிழ் நாடு)
மொழிபெயர்ப்பு "பாலைநில ரோஜா" கு. சின்னப்ப பாரதி
சிங்களத்தில் உபாலி லீலாரத்ன (இலங்கை)
கட்டுரை "நூல் தேட்டம்" என். செல்வராஜா,நூலகவியலாளர்(இலண்டன்)
சமூகப்பணி அந்தனி ஜீவா (இலங்கை)
சமூபப்பணி பெங்களுர் தமிழ்ச் சங்கம் (தமிழ்நாடு)

## சாஹித்திய இரத்தினம் - தெளிவத்தை ஜோசப்

இலங்கையின் மூத்த படைப்பாளி தெளிவத்தை ஜோசப் இவ்வாண்டின் சாஹித்திய இரத்தின விருதினை ஜனாதிபதியிடமிருந்து 03-09-2014 அன்று பெற்றுக்கொண்டார்.

மயைகம் என்ற உணர்வுக்குத் தனது எழுத்தாற்றலால் உருவம் கொடுத்தவர் தெளிவத்தை ஜோசப். இவர் மலையகத்தின் மூத்த எழுத்தாளராவர்.அவரது பவள விழாவை கடந்த 16-05-2010 அன்று கொழும்புத் தமிழ்ச்சங்கம் கொண்டாடியது. இவரின் எழுத்துப் பணியை நாமும் வாழ்த்துவோம்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எஸ்.எஸ்.இராஜேந்திரன் காலமானார்.



பழம்பெரும் நடிகர் எஸ்.எஸ். ராஜேந்திரன் மரணம் வெள்ளிக் கிழமை, 24 ஒக்ரோபர் 2014,

பழம்பெரும் நடிகர் எஸ்.எஸ். ராஜேந்திரன் உடல்நலக்குறைவால் காலமானார்.எஸ். எஸ். ராஜேந்திரன் என அழைக்கப்படும் சேடப்பட்டி சூரியநாராயண தேவர் ராஜேந்திரன் 1950, 60களில் தமிழ்த் திரையுலகில் புகழ்பெற்று விளங்கினார்.

பார் மகளே பார், குங்குமம், பச்சைவிளக்கு, கைகொடுத்த தெய்வம் சாரதா போன்ற திரைப்படங்களில் இவருடன் இணைந்து நடித்த விஜயகுமாரியைத் திருமணம் செய்துகொண்டார். ஏற்கனவே திருமணமாகியுள்ள நிலையில் விஜயகுமாரியை மறுமணம் செய்த எஸ்.எஸ்.ஆருக்கு அவர் மூலமாக ஆண் குழந்தையொன்று பிறந்த நிலையில் அவரை விட்டுப் பிரிந்தார்.

பின்னர் இருவரும் தனித்தனியாக திரைப்படங்களில் நடித்தார்கள்.

1962ல் தேனி சட்டமன்றத் தொகுதியிலிருந்து திமுக சார்பாக தேர்ந்தெடுக்கப்பட்டார். நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினராக திமுகவின் சார்பில் 1970 ஏப்ரல் 03 ஆம் நாள் முதல் 1976 ஏப்ரல் 02 நாள் வரை பணியாற்றினார். 1980இல் ஆண்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதியிலிருந்து அ.தி.மு.க. சார்பாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இந்நிலையில் 86 வயதான இவர், உடல் நலக்குறைவால் சென்னை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். ஆனால் சிகிச்சை பலனின்றி 24-10-2014 காலை காலமானார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து அன்பகம்
# சிறுவர் இல்லம்-வவுனியா




விழாவின் சிறப்பு நிகழ்ச்சியாக இவ்வச்சிறுவர்கள் "நீர்வளம் காப்போம்" என்ற தலைப்பிலான வில்லிசையை அரங்கேற்றுகின்றனர்.

WISSEN, KULTUR & LITERATUR
ZWEIMONATIGE AUSGABE
HTTP://WWW.MANN-ERDE.COM

# ERDE
# Mann

2014
GERMANY
AUSGABE 168




| | | |
|---|---|---|
| வருட சந்தா | ஜேர்மனி | 15€ |
| | ஏனைய நாடுகள் | 20€ |


Digitized by Noolaham Foun
noolaham.org | aavanaham.